திராவிடநாடு

12-3-61 | ஞாயிறு | விலை 10 காசு

# தீர்ப்புக் கூறு!

—[மை. பெருங்கோ]—

அருவி நழுவும் மலைமுகடும்
அலைகள் நெளியும் முக்கடலும்
பெருகி ஓடும் உயிர் நதியும்
பொன்னும் மின்னும் நிலக்கனியும்
கருவில் திருவை உடையாராய்க்
காணும் கணக்கில் கைவினைஞர்
பெருகி இங்கே இருந்திடினும்
பெற்றாரோ மாசொல் நல்லின்பம்?

வான மங்கை கார்குழலை
வருட வளரும் உயர்மரங்கள்
மீனக் குளங்கள் கல்லணைகள்
மிதக்கும் கப்பல் துறைமுகங்கள்
காணக் குளிரும் பைங்கழனி
கணக்கில் வளங்கள் இயற்கையதாய்
ஆன போதும் இங்கிவற்றால்
அடைந்தோ மாசொல் வாழ்வின்பம்?

எங்கும் இயற்கை அருள்சுரந்தாள்!
எல்லை யில்லாப் பல்வளங்கள்
தங்கி இங்கே இலங்கிடினும்
தட்டி வடவர் மேற்கொள்ளின்
மங்கி மழுங்கித் தாய்ப்புலமே
மாயும் மெய்யாய்த் திராவிடத்தீர்!
இங்கே நாளைப் பொதுத்தேர்தல்
இதற்குள் தீர்ப்பைக் கூறிடுவீர்!

# உலக வரலாற்றில் லுமும்பா

ச. பன்னீர்ச்செல்வன்

காங்கோவின் முன்னாள் பேரமைச்சர் லுமும்பா படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி உலகத்திலுள்ள அத்தனை நல்லவர்களுக்கும்—நேர்மைத் திறன் கொண்ட ஜனநாயக வாதிகளுக்கும், கடமையுணர்ச்சி பொருந்திய அரசியல் வாதிகளுக்கும் பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது—உணர் விழந்த மக்களுக்கு உணர்ச்சியூட்டியவர் — விடுதலை என்றால் என்னவென்று கேட்டவர்களுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த தீரர்—எத்துணை துயர் வந்துற்ற போதிலும், அதை மன உறுதியோடு ஏற்று எதிர்த்துப் போராடி வெற்றி காண்பேன் என்று பாராளுமன்றத்தில் முழங்கியவர்.

தன்னுடைய சொந்த நாட்டு மண்ணிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். மணம் வீசும் அழகிய நறுமலர்கள் நிரம்பிய பூங்காவில் எருக்கம் பூவும் மலர்வது போன்று—லுமும்பா, மாரிசுபோலோ, ஒசிடோ போன்ற விடுதலை வீரர்கள் தோன்றிய மண்ணில் சில வீணர்களும், காட்டிக் கொடுக்கும் கயமை உள்ளம் படைத்தவர்களும் வாழத்தான் செய்கிறார்கள்—என்ன செய்வது?

ஆடு மாடுகளைப் போன்று வெள்ளையர்களின் வீடுகளிலும், காடுகளிலும், சுரங்கங்களிலும் அடிமை வேலை செய்து, அவர்கள் இடும் பிச்சையுணவைக்கொண்டு காலம் நடத்திவந்த மக்களின் உள்ளங்களில், விடுதலை வேட்கையையும், எழுச்சியையும் ஏற்படுத்தியவர்—லுமும்பா! இரவு பகல் என்று பாராது தன்நாட்டுமக்கள் உழைப்பதையும்—அந்த ஒன்றுமறியாத மக்களை ஆட்டிப் படைத்து அவர்தம் உடலுழைப்பைத் தங்களின் சுகபோகத்திற்கு உடைமையாக்கிக்கொண்டு ஆணவத்தோடு அரசோச்சும் பெல்ஜிய வர்க்கத்தையும் காணும் போதெல்லாம், லுமும்பா மனம்புழுங்கிக் குழைந்து போவார். எரிமலை ஒரு நாள் வெடித்து அனற் பிழம்பை வாரி இறைத்தது! லுமும்பா தன்னுடைய நாட்டு மக்களை நோக்கி முழக்கமிட்டார். "என்னருமை நண்பர்களே—இந்த நாட்டில் சொகுசாக உல்லாச வாழ்க்கை நடத்தும் பெல்ஜிய வர்க்கத்தினர் வாழுகின்ற மாட மாளிகைகளும் — உண்ணுகின்ற உயர்ந்தவகை உணவுகளும் —முதல் தரமான மது வகைகளும்—ஊர்ந்து செல்லுகின்ற பளபளப்பான கார்களும் நம்முடைய உழைப்பால் விளைந்தவை—நாம் சிந்திய வியர்வைத்துளிகளின் மறு உருவங்கள்—குருதியை உழைப்பாக மாற்றி நாம் உண்டாக்கிய அத்தனை பொருள்களும் அவர் வசத்தில்! நம் உழைப்பை நம்பி வாழ்பவர்களால் நாம் அடிமைபடுத்தப்பட்டிருக்கிறோம் — அந்த உலுத்தர்களின் துப்பாக்கி முனையில் நம்முடைய உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது —இந்தக் கேவலமான அடிமை வாழ்க்கையை இன்னும் எத்தனை காலத்திற்கு நடத்திக்கொண்டிருக்க வேண்டும்? இதற்கொரு முடிவு காணவேண்டாமா? நமக்கு உணர்ச்சி இல்லையா?—வீரத்திற்குத் தான் குறைவா? கிளர்ந்தெழுங்கள் வீரர்களே!—உரிமைக்குப் போராட ஓடோடியும் வருவீர்! நம்முடலில் உள்ள கடைசிச் சொட்டுக் குருதி தீரும் வரையில் போராடுவோம்! வெற்றியோடு வாழ முயலுவோம்—இல்லையேல் சொந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்தோம் என்ற பெருமையுடன் இந்த நாட்டின் மண்ணைத்தழுவுவோம்"—என்று போர் முரசம் கொட்டினார் லுமும்பா.

சூடேறிப்போன கண்ணாடியில் நீர்த்துளிகள் பட்டவுடன் விரிசல் ஏற்படுவதுபோன்று—அடிமைத்தளையில் நெடுங்காலம் சிக்கிச் சீரழிந்து செயலற்றுப்போயிருந்த காங்கோ நாட்டு மக்களுக்கு லுமும்பா ஒரு கலங்கரை விளக்கமாகக் காட்சியளித்தார். கண்களில் நீர் தளும்ப, மெய்சிலிர்க்க—குருதி கொதிக்க—மக்கள் லுமும்பாவின் வீரவுரையைக் கேட்கஆரம்பித்தனர். அதன்விளைவு! பொங்கிய பல்லாயிரம் உள்ளங்களின் உணர்ச்சிப் போராட்டமாக மலர்ந்தது. அதுவே அந்த நாட்டின் விடுதலைப் போராட்டமாக — ஏன்? இறுதிப்போராட்டமாக அமைந்தது. லுமும்பாவின் எண்ணம் ஈடேறிக் கொண்டிருந்தது. இருள் சூழ்ந்திருந்த இடத்தில் பகலவன் உதித்து ஒளிபரப்ப ஆரம்பித்தான். தெருவெல்லாம் வீரமுழக்கம்-"அந்நியனே வெளியேறு! எங்கள் நாட்டை எங்களிடம் கொடு" என்ற உணர்ச்சி முழக்கம்! சில இடங்களில் வன்முறைச் செயல்கள் — காங்கோ நாட்டு மக்களின் உழைப்பில் வளர்ந்த பெல்ஜிய வெள்ளை வர்க்கத்தினரின் குருதி காங்கோவின் தெருக்களில் கரைபுரண்டோடியது. அவர்கள் வசித்த பகுதிகள் தீக்கிரையாயின. ஏதுமறியாத மக்களை என்றென்றும் அடிமையாக்கித் தங்களின் சுகபோக வாழ்க்கையைத் தங்கு தடையின்றி நடத்திச்செல்லலாம் என்ற எண்ணத்தில் இறுமாந்திருந்த பெல்ஜியத்தார் மக்களின் மன எழுச்சி கண்டு மனம் பதறினர். காங்கோவின் இயற்கை வளமான தங்கத்தைக்கொண்டு தங்கள் நாட்டின் பொருளாதார நிலையினைக் கணிசமான அளவிற்கு உயர்த்திக் கொண்டிருந்தபெல்ஜியத்தார்,திடீர்ப் புரட்சி கண்டு திகைத்தனர். பிரிய மனமில்லாமல்—வேறு வழிகாணாமல் மூட்டை முடிச்சுகளோடு ஒரு 'நல்ல' நாளில் வெளியேறினர்.

காங்கோவில் மக்களாட்சி மலர்ந்தது. அதேநேரத்தில் உடன்பிறந்தே கொல்லும் பயங்கர உட்பகையும் தலைதூக்க ஆரம்பித்தது. பதவி வெறி, சுயநலம் இவையிரண்டும் குடிகொண்ட ஒருசிலர் லுமும்பாவுடன் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துவிட்ட காரணத்தால், சூழ்ச்சியும், நயவஞ்சகமும், பலப்பல உருக்களில் லுமும்பாவைச் சுற்றிச் சதிராடத் தொடங்கின. விடுதலை வேட்கையிலேயே ஒன்றிவிட்ட தீரன் லுமும்பாவினால் முதலில் இதனைக் கண்டு கொள்ளமுடியவில்லை. திடீரென்று ஒரு நாள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. நிலைகலங்கிப்போனார் — லுமும்பா!! பொம்மலாட்டக்காரனைப் போன்று பெல்ஜியத்தார் காங்கோ நாட்டவரையே கையில் போட்டுக் கொண்டு மலர்ந்த குடியரசை மண் கவ்வச்செய்ய முயலுகின்றனர் என்பதை அறிந்ததும் லுமும்பா துடிதுடித்துப்போனார். அதன் பிறகு தான், காங்கோவில் புதிய குழப்பம் உருவாகியது. கசாவுபு, மொபுடு, ஷோம்பே இவர்கள் மூவரும் லுமும்பாவுடன் பலப்பரீட்சை செய்ய ஆரம்

( 4-ம் பக்கம் பார்க்க )

# அதில் ஒன்று இது!!

மலர் 19] ஆண்டு சந்தா ரூ. 8 (12—3—61) தனிப்பிரதி 16 காசு [இதழ்

தற்கொலை என்பது தாராளமாகத் தரணி எங்கும் நடைபெறுகின்ற ஒரு சாதாரண நிகழ்ச்சியே ஒழிய, அதுஒன்றும் புதிதாகவோ, புதுமைப்படத்தக்கதாகவோ, கேட்டவுடன் திகைப்பும் திகிலும் ஏற்படக்கூடிய தாகவோ உள்ள ஒரு நிகழ்ச்சி அல்ல என்ற முறையில் நமது மாநிலப் பொலீஸ் அமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்கள் தமிழ்நாடு சட்டசபையில் பேசியிருக்கிருர்.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த தண்டலம் கிராமத்தில் நடைபெற்ற ஒரு தற்கொலை நிகழ்ச்சியைப் பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்த கனம் அமைச்சர் அவர்கள்,

> கடன் தொல்லை தாங்கமுடியாமல் தண்டலம் கிராமத்தைச் சேர்ந்த புண்ணியகோடி என்பவரும், அவரது மனைவியும், அவர்களது ஆறு குழந்தைகளும் தற்கொலை செய்து கொண்டார்கள்.

என்று, எம். பி. சாரதி, எம். எல். ஏ. அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் கூறியிருக்கிருர்.

தற்கொலைக்குக் காரணம் கடன் தொல்லைதான் என்று விளக்கம் தந்த அமைச்சர் அவர்கள், தேவைக்கு ஏற்ற ஊதியம் இல்லாத காரணத்தால் இப்படியெல்லாம் தற்கொலைகள் நடைபெறுவதற்கு யார் பொறுப்பு, அதற்குப் பரிகாரம் என்ன என்று ஆராய்ந்து ஆவன செய்யவேண்டிய இடத்தில் அமர்த்தப்பட்டிருப்பவர், எவ்வளவு எளிதாக, அதனை ஒரு மிக மிகச் சாதாரண நிகழ்ச்சியாக எண்ணிப் பதில் கூறியிருக்கிருரே என்பதை எண்ணிப் பார்க்கும்போதுதான், இப்படிப்பட்டவர்களை அமைச்சராக்கிய மக்கள்பால் அவர்கள் எத்துணைக் கடுமையான உள்ளத்தோடு—கவலையற்ற போக்கோடு நடந்துகொள்கிருர்கள் என்பது புலனுகின்றது.

> "தற்கொலைக்குக் காரணங்கள் எவ்வளவோ உண்டு. செழிப்பு வாய்ந்த மேல் நாடுகளிலும் தற்கொலைகள் நடைபெறுகின்றன"

என்று விளக்கம் தந்துள்ளார். இப்படிப்பட்ட கொடுமையான நிகழ்ச்சிகள் நாட்டுக்கு எவ்வளவு இழுக்கு என்று உணர்ந்து அதற்காக வேதனைப்பட்டு, வேண்டுவன செய்து நாட்டைத் தற்கொலை நாடாக ஆக்காமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கும் ஒருவர்,

> தற்கொலையா? அது சர்வ சாதாரணம், இங்கு மட்டுமா? எங்கும்தான் தற்கொலைகள் நடைபெறுகின்றன. அவற்றில் ஒன்று இது-

என்று ஏனோதானோ என்ற போக்கில் பதில் சொல்வது நல்லதல்ல—அவருக்கும் நாட்டுக்கும் என்பதனை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிருேம்.

★

---

## பொதுச்செயலாளர் இரங்கல்

சென்னை. மார்ச் 7—

இந்திய துணைக்கண்டத்தின் விடுதலைக்காகக் காலமெல்லாம் கடுமையாக உழைத்து, விடுதலை வீரர்களின் பட்டியலில் சிறப்பிடம் பெற்ற முதியவர் கோவிந்த வல்லப பந்த் மறைவுச் செய்திகேட்டு, துக்கம் கப்பிய நிலையில், திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர், மாவீரர் மட்டுமல்ல; மதிநுட்பமிக்கவர். அவருடைய அறிவாற்றலைக் கண்டு, வியக்காதார் இல்லை. ஆங்கில அரசு இருந்த காலத்திலேயே அவருடைய நெஞ்சு உரமும், அறிவுத் திறனும் எவருக்கும் அவரிடம் ஓர் தனிமதிப்பை ஏற்படுத்தத்தக்கனவாக இருந்தன.

உடல்நலம் சரியில்லாதபோதும், கடைசிவரை களம் நிற்கும் போர் வீரர்போல, பந்த் அவர்கள், தமக்குச் சரி என்று பட்டமுறையில் நாட்டுப் பணியாற்றிவந்தார்.

பாராளுமன்றத்திலே அவருடைய பேச்சுகள், போர்ப் பரணிகளாக விளங்கின.

பிரச்சினைகளைப்பற்றிய தெளிவுடன், தமது கருத்தை, எத்தகைய எதிர்ப்புக்கு இடையிலேயும் வலியுறுத்தும் துணிவும், நம்பிக்கையும் கொண்ட முறையில் பந்த் அவர்கள் பேசியும், செயலாற்றியும் வந்தார்.

அவருடைய மறைவு, மிகப்பெரிய இழப்பாகும்.

விடுதலைப் போர்வீரர் முன்னணியின் மிக முக்கியமானவர் மறைந்துவிட்டார்; அவருடைய பெயர் வரலாற்றில் சேர்ந்துவிட்டது.

வீரர்களையும், விவேகிகளையும் பாராட்டும் பண்பு அறிந்த திராவிட முன்னேற்றக் கழகம், அவருடைய மறைவுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அவருடைய குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

**அண்ணுதுரை,**
பொதுச்செயலாளர், தி. மு. க.

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

பித்தனர். ஒருவரை ஒருவர் பதவியிலிருந்தும் விலக்கிவிட்டதாக அறிக்கை விட்டனர். மக்கள் குழம்பித் தவித்தனர். வெறும் விடுதலை உணர்ச்சியும், ஒன்றுமறியாத மக்களின் ஆதரவையும் கொண்ட லுமும்பாவால்—அதிகார வர்க்கத்தின் நிழலாட்டத்தில் பதுங்கிப்போரிடும் அடிமைகளோடு தாக்குப்பிடிக்க இயலவில்லை—அதன் விளைவு?

காங்கோ சிங்கம்! அடிமைகளின் உள்ளங்களில் வீர உணர்ச்சியைத் தோற்றுவித்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வீரன் — சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு என்றென்றும் போற்றப்படவேண்டிய தீரன் — அடிமைகளால் ஒரு நாள் சிறை வைக்கப்பட்டார்! உலகத்தில் சமாதானத்தை நாங்கள்தான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று பறைசாற்றிக்கொண்டிருக்கும்உலக நாடுகள் மன்றத்திற்கு (U. N. O.) அதன் துணைவேண்டி லுமும்பா வேண்டுகோள் விடுத்தார். எங்கள் நாட்டில் நீதி புறக்கணிக்கப்படும் நிலை பாரீர்! இந்தக் கொடுமையினை அகற்றி அதற்கொரு முடிவுகாண வாரீர்!! என்று இறுதி அழைப்பு விடுத்தார்.

உலக நாடுகளின் மன்றம் ஒரு பிரதிநிதியை அங்கு அனுப்பியது. வந்தென்னபயன்? எவரால் அங்கு உலக நாடுகள் தலையிட்டதோ—அந்த நல்லவரை—விடுதலை வீரரை—தாயகத்தின் தளையகற்றப் பாடுபட்ட வீரனை உலக நாடுகள் மன்றத்தால் காப்பாற்ற இயலவில்லை. மக்களின் ஆதரவும், உலகநாடுகளின் அனுதாபமும் லுமும்பாவுக்கு ஆதரவாக அமைய ஆரம்பித்ததைக் கண்ட அரசியல் அடிமைகளும் — அவர்களின் விசுவாச எஜமானர்களும் ஒரு 'நல்ல' நாளில்—காங்கோவின் ஒப்பற்ற தலைவன் லுமும்பாவை மிருகத்தனமான முறையில் சொந்த நாட்டு மண்ணிலேயே சுட்டுக் கொன்றுவிட்டனர். இருளகற்ற ஏற்றிவைத்த ஒளிவிளக்கை வீணர்கள் அணைத்துவிட்டார்கள்! அற்பர்களின் நல்வாழ்க்கைக்காக அயராது பாடுபட்ட தன்மான வீரன் வீழ்ந்துபட்டான்! மக்கள் கதறி அழுதனர்! விடுதலைக்காகப் பாடுபடும் உலகத்திலுள்ள அத்தனை ஜனநாயக அரசியல் வாதிகளும் செயலற்றுத் திகைத்து நின்றனர். இதற்கொரு முடிவு கண்டாகவேண்டும் என்று நல்லவர்கள் முழங்குகின்றனர். அதைத்தான் நாமும் வலியுறுத்திக் கூறுகிறோம்.

லுமும்பாவின் படுகொலை உலகத்திற்கே அநீதியாளர்களால் விடப்பட்ட அறைகூவலாகும். அந்த அறைகூவலை நாம் ஏற்று எடுக்கும் முடிவு உலகத்திற்குச் சிறந்த வழிகாட்டியாக அமையவேண்டும். காங்கோவில் அழிந்துபட்டது லுமும்பா அல்ல! காங்கோவின் தேசியஎழுச்சி லுமும்பா உருவில் வைத்து அழிக்கப்பட்டது! — காலமெல்லாம் விடுதலை ஒன்றைத்தவிர, வேறெதையும் காண விரும்பாது, அயராது உழைத்து, இடையிலே தன் வாழ்க்கையை — உயிர்மூச்சைப் பறிகொடுத்த காங்கோதீரன் முடிவை அடிப்படையாகக் கொண்டு, இனியாவது உலகநாடுகள் மன்றம் (யு. என். ஒ.) வன்முறைச் செயல்களை மேற்கொண்டோர்மீது கடும் நடவடிக்கை எடுக்க முயலவேண்டும். இந்தக் கொடுஞ்செயலுக்குக் காரணமானவர்கள் அத்தனைபேரையும் உலக நாடுகளின் நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தவேண்டும். அரசியல் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு அவர்களுக்குத் தக்க தண்டனை அளிக்கவேண்டும். காங்கோவில் நிலையான அமைதி பொருந்திய குடியரசு காண வழிவகை செய்யவேண்டும். காங்கோவில் லுமும்பாவின் ஆதரவாளர்கள் அமைத்துள்ள புதிய அரசாங்கத்திற்கு நிறைந்த அளவில் ஆதரவு அளிக்கவேண்டும். நீண்ட உலக வரலாற்றில் நிலையான ஓரிடத்தில் அமர்ந்துவிட்ட லுமும்பாவின் கனவு நினைவாகவேண்டும். இவற்றையெல்லாம் செய்தால்தான், உலகநாடுகளின் மன்றத்திற்கு (யு. என். ஒ.) உலகில் நல்ல மதிப்பும் நம்பிக்கையும் ஏற்படும்.


அறிக்கை:—

## "திராவிட நாடு"

| | | | |
|---|---|---|---|
| 1. | வெளியாகும் இடம் | ... | 86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம். |
| 2. | வெளியிடும் நாட்கள் | ... | வாரம் ஒருமுறை |
| 3. | அச்சிடுவோரின் பெயர் | ... | சி. என். அண்ணாதுரை |
| | இனம் | ... | திராவிடர் |
| | முகவரி | ... | 86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம், |
| 4. | வெளியிடுவோரின் பெயர் | ... | சி. என். அண்ணாதுரை |
| | இனம் | ... | திராவிடர் |
| | முகவரி | ... | 86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம். |
| 5. | ஆசிரியர் பெயர் | ... | சி. என். அண்ணாதுரை |
| | இனம் | ... | திராவிடர் |
| | முகவரி | ... | 86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம். |
| 6. | பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களும், முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரியும். | | சி. என். அண்ணாதுரை 86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம். |

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்த மட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று சி. என். அண்ணாதுரையாகிய நான் அறிவிக்கிறேன்.

12—3—61 (ஒப்பம்) சி. என். அண்ணாதுரை.

வெளியிடுவோர்.




தென்றல் பெஸ்கி, எம்.ஏ.,

ரோம் நகர நாகரிகத்தை உலகெலாம் பரப்பி ஊர் மெச்ச வாழ்ந்துவந்த இத்தாலி, 19-வது நூற்றுண்டின் தொடக்கத்தில் பிளவுபட்டுச் சீரழிந்து சின்னுபின்னப்பட்டு ஆதிக்க வெறியர்களின் மஞ்சத்து மனேகரியாக — காமக்கிழத்தியாக இருந்தது. குன்றுபோல் ஒரே நாடாக இருந்த இத்தாலி லம்பார்டி, வெனிஷியா, நேப்பிள்ஸ் மத்திய பாகம், போப்நாடு போன்ற பல சிறு சிறு நாடுகளாக, தமிழகம், ஆந்திரம், கன்னடம், மலையாள நாடுகள் (திராவிடம்) போன்று பிரிக்கப்பட்டது. இத்தாலியின் வடக்குப்பாகம் வல்லரசான ஆஸ்திரியாவின் கோரப் பற்களிடையே சிக்குண்டு தவித்தது. தெற்குப்பாகம் ஸ்பெயின் ஏகாதிபத்ய அரவணைப்பில் விடுபட முடியாமல் திணறிக்கொண்டிருந்தது. மத்திய பாகம் அறியாமை என்னும் காதலியோடு இருள்படிந்த அறையிலே உல்லாச வாழ்க்கை தேடிக்கொண்டு, கத்தோலிக்க மத குருவாம் போப் ஆதிக்கத்தில் அடிமை வாழ்விலும் ஆனந்தகீதம் இசைத்துக்கொண்டிருந்தது.

"இத்தாலியின் பழம்பெருமையை நினைவுகொள்வீர், அடிமைத்தளையை அறுத்தெறிய ஆர்த்தெழுவீர், செங்குருதி நீர்பாய்ச்சிச் சிங்கநிகர் தோள் கொடுத்து விடுதலைக் கட்டிடத்தை வானளாவக்கட்டுவோம்புறப்படுவீர்" என வாலிபர்களுக்கு எழுச்சி முறுக்கேற்ற—உரிமை உணர்ச்சியூட்ட ஒரு தலைவன் கிளம்பினுன். அவன்தான் விடுதலை வீரன் மாஜினி. அந்த மாஜினியின் கொள்கைக்கு உரமூட்ட ஒரு மாவீரன் பக்கபலமாகக் கிளம்பினுன். அவன்தான் 1807-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதி நைஸ் என்ற இடத்தில் பிறந்த ஜோசப் கரிபால்டி, தனது பதினைந்தாவது வயதிலேயே, படைபெருத்த அந்நிய ஏகாதிபத்தியங்களைத்துடை நடுங்கச் செய்யப் புறப்பட்டான். பள்ளிக்குச் செல்லும் அவனது பின்னழகைக்கண்டு மயங்கவேண்டிய தாய், துப்பாக்கியைத் தோளில் ஏந்தி மலைமுகடுகளிலும் குன்றுகளிலும், கடற்கரை ஓரங்களிலும் தனது வீரச் செயல்களைக் காட்டப் புறப்பட்டுவிட்ட கரிபால்டியைக் கண்டு கலங்கினுள். இளம்வயதில் இவன் வீரச்செயலைக்கண்ட உடனிருந்த தோழர்கள் 'இல்லை இவன்போல் இத்தாலியப் புரட்சிவீரன்' என்று சிந்துபாடி மகிழ்ந்தனர்.

சிறு வயதிலேயே கரிபால்டிக்கு வீரமிக்க செயல்களைச் செய்யவேண்டும் என்ற ஆவல் உண்டு. பள்ளி வாழ்க்கையில் வெறுப்புற்று வீட்டு வாழ்க்கையில்சலிப்படைந்து,தனது தோழர்களுடன் ஒரு சின்னப்படகில் வெளியேறிவிட்டான் சிறுவன் கரிபால்டி. கரிபால்டி வீட்டைவிட்டுச் சென்றதை அறிந்த ஒரு பாதிரியார், தந்தைக்குத் தெரியப்படுத்த, தந்தை மகனைத் தேடி அலைந்து மீண்டும் வீட்டிற்கு அழைத்துவந்தார். கட்டுப்பாட்டிற்கு உட்படாமல் சுயேச்சையாக நாம் நடத்த இருந்த வாழ்க்கையைக் கெடுத்துவிட்டாரே என்று நினைத்த கரிபால்டி, அன்றுமுதல் பாதிரிமார்களையே வெறுக்க ஆரம்பித்தான்.

இந்தச் சமயத்தில் இத்தாலியின் விடுதலைக்காக விடுதலை வீரன் மாஜினி தலைமையில் 'இளம் இத்தாலி' என்ற ஒரு அமைப்பு செயல்பட்டு வந்தது. விடுதலை வேட்கை நிரம்பிய கரிபால்டி, தன் வாழ்க்கையை அந்த இயக்கத்திற்கு அர்ப்பணித்துக்கொண்டு களம் நோக்கிப் பீடு நடை போட்டான். "என் நாட்டை விடுவிக்க ஒரு தலைவனைத் தேடி அலைந்தேன்; அந்தத் தலைவன் மாஜினிதான் என்பதை உணர்ந்தேன். கொலம்பஸ் புதிய உலகம் கண்டுபிடித்த அன்று அடைந்த மிகிழ்ச்சியைவிட, ஆயிரமடங்கு மகிழ்ச்சி அடைந்தேன்" என்று தன் தலைவன் மாஜினிபற்றிக் கரிபால்டி கூறுகிருன். கரிபால்டி அரசியல் வாழ்வில் அடியெடுத்தவைத்த நேரத்தில், தலைவன் மாஜினி தாங்கொணுத் தொல்லைகளையும் துன்பங்களையும் தன்நாட்டைவிட்டு, நாடு கடத்தப்பட்ட நிலையில் அனுபவித்துக்கொண்டிருந்தான். கொண்ட கொள்கைக்காக—நாட்டு விடுதலைக்காகச் சுடுகின்ற கொதிமணலில் மிதிக்கின்ற இடமெல்லாம் மலர் தூவிய பஞ்சணையென நினைத்து, ஊர் ஊராக அலைந்த அந்த உத்தமத் தலைவனைத்தான் "மற்றவர் உறங்கும் பொழுது, உறக்கம் தவிர்த்த ஒரே தலைவன்; என் நண்பன்; என் அரசியல் வழிகாட்டி!! என்று புகழ்கிருன்—கரிபால்டி.

மாஜினியின் அயரா உழைப்பின் காரணமாக—கரிபால்டியின் தளரா முயற்சி காரணமாகப், பார் சிறுத்ததோ படை சிறுத்ததோ என்ற அளவிற்கு இளம் இத்தாலியின் பலம் பெருக ஆரம்பித்தது. நாடெங்கும் விடுதலை உணர்ச்சி பரவியது. இளம் இத்தாலி விடுதலை இயக்கத்தின் வலிவைக் கண்டு ஐரோப்பாவே நடுநடுங்க ஆரம்பித்தது. ஜெனி

வாவுக்குச் சென்று அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உள்ள இத்தாலியர்களை ஒன்று சேர்க்கவேண்டிய பணி கரிபால்டியிடம் கொடுக்கப்பட்டது. ஆனால், உள்நாட்டுத் துரோகிகள் சிலர் செய்த வஞ்சக வேலை காரணமாக, கரிபால்டி தப்பியோடவேண்டிய ஓர் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. தப்பிச் சென்ற கரிபால்டியின் தலையைக்கொண்டு வருபவர்க்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும் என அறிக்கை வெளி வந்தது. இரண்டு ஆண்டுகள் தலைமறைவாகத் திரிந்தான். பிறகு, இத்தாலியில் இருந்து தென் அமெரிக்காவுக்கு ஓடிவந்தான். தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் பகுதி அப்பொழுது போர்ச்சுக்கீசியர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. அதை எதிர்த்துப் பிரேசில் வீரர்கள் போர் துவங்கினர். நாடு கடத்தப்பட்ட இத்தாலிய வீரர்கள் சிலர் பிரேசில் வீரர்களுக்குத் துணை புரிந்தனர். வலிமை வாய்ந்த போர்ச்சுக்கீசியப் படை வலிமை கெட்ட வீரர்களை அடக்கி, அவர்கள் கையில் விலங்கு பூட்டி அழைத்துச் சென்றது. இத்தாலிய வீரர்கள் கையில் விலங்கு துவழ்வதைக் கண்ட கரிபால்டி கண் கலங்கினார். கொடுமையாளர்களைப் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்துடன், தன்னுடன்பன்னிரண்டு வீரர்களைச் சேர்த்துக் கொண்டு 'மாஜினி' என்ற ஒரு படகு தயார் செய்து பிரேசிலில் போர்ச்சுகீசியருக்கு, எதிராக விடுதலைக் கொடியை வானளாவப் பறக்கவிட்டார். போர்ச்சுக்கீசியப் படையினரைக் கண்ட கண்ட இடங்களில் தாக்கி அவர்களை நிலைகுலையச் செய்தார். கரிபால்டியின் அஞ்சா நெஞ்சமும், ஆண்மைத் திறனும் ஐரோப்பா முழுவதும் பரவியது. எதிர்பாராத விதமாகச் சாந்தா கட்டீரினா என்ற இடத்தில் பலத்த புயலுக்கு இரையாகி மரக்கலம் உடைந்து சுக்குநூறாகியது. கரிபால்டி நீந்துவதில் மிகத் திறமைவாய்ந்தவராதலால் தப்பிவிட்டார். ஆனால், கண்ணெதிரிலேயே தனது தோழர்கள் கடலில் மூழ்கியதை, இறக்கும் வரையில் அவரால் மறக்க முடியவில்லை. பெற்ற தாயினும் மேலாகக் கவனித்த அவரது தோழர்கள் குடும்ப பாசத்திற்கும் விடுதலைப் பாசத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய அவர் அன்புத் தோழர்கள் "தம் நாட்டின்மேல் அன்பு கொண்டவர்கள் என்னைப் பின் தொடருங்கள். நான் அதற்குக்கூலியாக உங்களுக்குப் பணமோ உணவோ தரமாட்டேன். அதற்குப் பதிலாக பட்டினியும் சாவுமே உங்களுக்குப் பரிசாக அளிப்பேன்" எனக்கரிபால்டிகூறிய பொழுது வயோதிகத் தாயையும் வறுமையிலே உழலும் தந்தையையும், பெற்றெடுத்த பிள்ளைகளையும், பேணிப் பாதுகாத்த மனைவியையும் விட்டுவிட்டுத் தலைவன் வழி பின் சென்ற அவர் அருமைத் தோழர்கள் தம் கண்ணெதிரிலேயே மாண்ட அந்தக் கோரக் காட்சியைக் கண்டு, நிலைகுலைந்து நெஞ்சம் உருகிக் கோவெனக் கதறியழுதார். அமைதியற்ற அவர் மனதிற்கு ஆறுதல்கூற அன்பே உருவாய் வந்தாள் அனிடாரிபெராய் என்ற பூங்கொடி; விருப்பமில்லா மணாளனுக்கு மாலையிட அவள்தந்தை ஆணையிட்டபொழுது, கரிபால்டியின் வீரத்தையும் விடுதலைக்கு அவர் எடுத்த முயற்சிகளையும் கண்டு காதல் கொண்டு கரிபால்டியின்பின்னே மகுடிகேட்டநாகமென நடந்தாள். மான்டிவிடியோ என்ற இடத்தில் இருவரும் திருமணம் புரிந்துகொண்டனர். கணவனுக்கேற்ற காரிகையாக விளங்கினாள் அவள். இத்தாலியின் விடுதலைப்போரின் வரலாற்றில் அவள் பங்கு மிகப்பெரிது. அவள் குதிரைச் சவாரியில் வல்லவள். குதிரை மீதமர்ந்து மாதக்கணக்கில் அவர்கள் காடுமேடெல்லாம் சுற்றினர். கொரில்லாப் போர்முறையாகிய மறைந்திருந்து எதிரிகளைத் தாக்கும் முறையைக் கரிபால்டி பின்பற்றியதால், அனிடா கணவனுடன் பல குன்றுகளையும் காடுகளையும் சுற்ற வேண்டியிருந்தது. அனிடா, மனைவியாக மட்டுமல்லாமல், தோழியாக—துன்பம் துடைக்கும் தாயாக — ஊக்குவிக்கும்ஆசிரியையாகப் பணி புரிந்தாள். அனிடாவிற்குப் பல முறை சாவைச் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் நேரிட்டன. ஆனால், அவளுக்கே உரித்தான அசாத்தியத் துணிச்சலும் வீரமும் அவளைக் காப்பாற்றின. ஒருமுறை அவளை விரோதிகள் கைது செய்து அழைத்துச்சென்றனர். அவர்களிடமிருந்து தந்திரமாகத் தப்பிப் பலநூறு மைல்கள் குதிரைச் சவாரி செய்து தன் கணவனை வந்து அடைந்தாள். மீண்டும் கரிபால்டி வீரமுள்ள இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டு ஒருபடை திரட்டி ஆஸ்திரியப் படைகளுடன் போரிட்டார். அந்தப்போரில் அவர் தோற்கடிக்கப்பட்டு, அவரும் அவரது மனைவி, மற்றும் சில தோழர்களும் கைது செய்யப்பட்டனர்.

கரிபால்டியும் அனிடாவும் தவிர, ஏனைய தோழர்கள் ஆஸ்திரியரால் கொடுமையாகக்கொல்லப்பட்டனர். கரிபால்டி அனிடாவுடன்அவர்களிடமிருந்து தப்பி, ஒரு குடியானவன் வீட்டில் அடைக்கலம் புகுந்தார். அங்கு அவரது அன்பு மனைவி, துன்பத்திலும் இன்பத்திலும் பங்கு கொண்ட அவரது மடியில் தலை வைத்துத் தனது கடைசி மூச்சைக் காணிக்கையாக்கினாள். வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தன் நாட்டை விடுவிக்கும் விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்தார். இதற்கிடையில் நாடெங்கும் மக்கள் கொதித்து எழுந்தனர். விடுதலை உணர்ச்சி வேகத்துடன் வீசியது. நாடு மீட்க வீட்டுக்கொருவர் புறப்பட்டனர். 1859-ஆம் ஆண்டு கரிபால்டிக்குத் துணையாக விக்டர் இமானுவல் என்ற இத்தாலிய அரசனும், இத்தாலிய அரசியல் அமைச்சனும் தலைசிறந்த அரசியல்வாதியுமான கவூர் என்பவனும் கிளம்பினர்கள். மாஜினி, கரிபால்டி, கவூர், இமானுவல் இந்த நால்வரின் உழைப்பால், பேச்சால், செய்கையால் ஆதிக்க வெறிபிடித்த அந்நிய ஏகாதிபத்தியங்களான ஆஸ்திரிய, ஸ்பெயின் ஆதிக்கங்கள் ஒழிக்கப்பட்டன. பிரிந்து கிடந்த இத்தாலி ஒன்றுபடுத்தப்பட்டது. இத்தாலியின் விடுதலை வாழ்வின் ஆரம்ப விழா மிக மிகக் குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது. தன்து தாயகத்தின் விடுதலையைத் தன் கண்களால் கண்ணாரக் கண்டு அந்த மகிழ்ச்சியில் தனது 75-வது வயதில் கண்ணை மூடினார் கரிபால்டி.

# சாமியார் !!

ஆதவன்

இலுப்பை, மா, புளிய மரங்கள் நிறைந்த தோப்பு அது. அந்தத் தோப்புக்குப் பெயர் முல்லைக் காடு, ஆனால், அந்தத் தோப்பில் பல்லைக் காட்டிச் சிரிக்கும் முல்லைப்பூ கிடையாது. வண்டுகளுக்குத் தொல்லை கொடுக்கும் எந்தவிதமான மலர்ச்செடி, கொடிகளும் அங்கு கிடையா! சுருக்கமாய் சொல்லப் போனால் மருந்துக்குக்கூட ஒரு தும்பைப் பூச்செடி கிடையாது. பூச்செடிகளே இல்லாத தோப்புக்கு, ஏனோ முல்லைக்காடு என்று பெயர் வைத்தனர்.

அங்கு முல்லைச்செடி இல்லாவிட்டாலும், கண்களுக்கும் மனதுக்கும் குளிர்ச்சியான இடம்தான் முல்லைக் காடு. அங்குதான் நான் தினமும் மாலை நேரத்தில் உலாவி வருவதற்காகப் போவேன். தோப்புக்குத் தினமும் போவோர் வருவோரில் நானும் ஒருவன். தோப்பில் நான் ஒரு மரத்தடியில் அமர்ந்து சிறிது நேரம் ஏதாவது சிந்தனை செய்து கொண்டிருப்பேன். இருட்டிய பிறகு நான் வீடு திரும்புவேன், இது என் அன்றாட வேலை.

வழக்கம்போல் நான் அமர்ந்து இருக்கும் மரத்தடிக்கு அப்பால் இன்று ஓர் குடிசை கட்டியிருந்ததைக் கண்டேன். அக்குடிசையைக் கண்டதும், நான் எங்கேயிருக்கிறேன் என்ற சந்தேகமே எனக்கு வந்துவிட்டது. நேற்று மாலை தோப்புக்கு வரும்போது இந்தக் குடிசை இல்லை, இன்று வரும்பொழுது இங்கு ஓர்குடிசை. ஆனால், இந்தக் குடிசை புதிதாகத்தான் கட்டப்பட்டுள்ளது என்பதை,அதன் மேல் வேய்ந்திருந்த புதிய கீற்றைக் கொண்டும், குடிசைக்குக் கீழே யிருந்த புற்றினை மண்வெட்டியினால் செதுக்கி ஒரு பக்கம் மேடாகக் குவித்து இருந்ததைக்கொண்டும் தெரிந்துகொண்டேன்.

மக்கள் போக்கு வரவே இரவில் இல்லாத இந்தத் தோப்பில், யார் குடிசை கட்டிக் குடியிருக்கிறார்கள்? என்ற கேள்வியை என்னை நானே கேட்டுக்கொண்டேன். ஆனால், விடை தெரியவில்லை—இரவில் மிகவும் அமைதியாக இருக்கும் முல்லைக் காடு. பகலில் இங்கு மக்கள் வருவார் போவார்களே தவிர, இரவில் யாரும் தங்கமாட்டார்கள். பறவைகள்தான் இரவில் முல்லைக் காட்டில் தூங்கும். அப்பேற்பட்ட தோப்பில் இன்று திடீரென்று ஒரு குடிசை, அக்குடிசையில் மனிதர்கள் வசிக்கிறார்களா? இல்லையா என்பதை என் மனம் ஆராயத் தலைப்பட்டது. ஆனால், ஒருவரும் குடிசைக்குள்ளிருந்தோ, குடிசைக்குள்ளேயோ வரவும், போகவும் இல்லை. ஆனால், என் மனம் குடிசையில் யார் வசிக்கிறார் என்பதை அறியத் துடி துடித்துக்கொண்டு நின்றது.

நான் பலவாறாக எண்ணிக் கொண்டிருந்தேன், அந்தக் குடிசையையும் அதில் யார் வசிக்கிறார்கள் என்பதையும் பற்றி. ஆனால், சிறிது நேரத்திற்குப் பிறகு குடிசையிலிருநது ஓர் மனிதர் வெளிவந்தார். அவரின் தோற்றம் ஒரு துறவியைப் போல இருந்தது. சடாமுடியும், நீளமான தாடியும், கழுத்தில் ஓர் உருத்திராட்ச மாலையும் அணிந்திருந்தார், இடையில் ஓர் காவி வேட்டியும் கட்டியிருந்தார். ஆதலால் இவரின் தோற்றம் ஒரு சாமியார்போல் காட்சியளித்தது. இவர் நெற்றியிலும், உடம்பு பூராவும் திருநீறு அள்ளிப் பூசியிருந்தார். பண்டைக் காலத்தில் முற்றும் துறந்த முனிவர்கள், பற்று அற்ற ஞானிகள் எல்லாம் காட்டில் போய்க் கடும் தவம் செய்து ஆண்டவனின் அருளைப் பெருவார்களாம்; கதையில் படித்திருக்கிறேன்.

அதைப்போல் இந்தச் சாமியாரும் ஆண்டவனின் தரிசனத்தைப் பெற்றுச் சொர்க்கலோக வாழ்வு அடையத் தனியாக இந்தத் தோப்புக்கு வந்து அமைதியான துறவறத்தை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டாரோ என்று எண்ணியது என் மனம். சிலர் மணம் செய்துகொள்ளாமல், செய்துகொள்ளமுடியாமல் துறவறம் மேற்கொள்வார்கள். ஒரு சிலர் மணம்முடித்துச் சில ஆண்டுகள் மனைவியுடன் இன்பமாகக்கூடி வாழ்ந்து, இரண்டு மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பனாகி, மனைவியையும் குழந்தைகளையும் நடுத்தெருவில் திண்டாடவிட்டுவிட்டு, இல்லற வாழ்வில் வெறுப்புற்றவர்களாகத் துறவறத்தை மேற்கொள்வர்.

மற்றொரு சாரார் கொலை, களவு போன்ற குற்றங்களைச் செய்துவிட்டுப் பொலீசுக்கு மறைந்து சடாமுடியும் தாடியும் வளர்த்துக்கொண்டு, துறவறத்தை மேற்கொள்வர். ஆனால், இந்த மனிதர் எந்த விதத் துறவறத்தை மேற்கொண்டவரோ! தெரியவில்லை. மேலும் என்மனம் சாமியாரைப்பற்றியே ஆராய்ந்து கொண்டிருந்தது.

குடிசைக்குள்ளிருந்து வந்த அந்தச் சாமியார் கால் தாங்கித் தாங்கி நடந்து வந்தார். அவரின் கால்களில் ஒன்று நொண்டிபோலும்! பிறவியிலேயே ஏற்பட்டதோ! இல்லை இடையில் ஏற்பட்டதோ! யார் அறிவார்கள். ஏன் நாம் அவரைப்பற்றி ஆராயவேண்டும்? நமக்கு என்ன அவர் யாராக இருந்தால் என்று என்மனதை வேறுபக்கம் திருப்ப முயன்றேன். அதே நேரத்தில் அந்தச் சாமியார் என்னைக் கடந்து தோப்புக்கு அருகாமையில் இருந்த குளத்துக்குக் குளிக்கச் சென்றார். அப்பொழுது நான் அவரின் கால்களைக் கவனித்தேன். அவரின் கால்களில் ஒன்று பிறவியிலே ஏற்பட்ட ஊனம்தான், மற்றக் காலைவிட மிகச் சிறிதாக இருந்தது; அந்தக்காலில் கூட நான்கு விரல்கள்தாம் இருந்தன. இதேமாதிரி காலையுடைய மனிதரை நான் அடிக்கடி பார்த்து இருக்கிறேன், அந்த மனிதன்......யார்? அட! அவரை நன்றாகப்பார்த்து இருக்கிறோமே! இப்பொழுது நினைவுக்கு வரவில்லையே! அவர் பெயர் கூட எனக்குத் தெரியும். ஆனால், இப்போது மறந்துவிட்டதே! என்ன செய்வது என்றபடி யோசித்தேன் சிறிதுநேரம்.

ஆ! நினைவுக்கு வந்துவிட்டது' இதேமாதிரி கால்களையுடைய மனிதனின் பெயர் முத்தப்பன் அல்லவா! இரண்டு ஆண்டுகளுக்கு முன்புவரை இதே ஊரில்தான் இருந்தான். ஆனால், இவன் கள்ளத்தனமாய்ச் சாராயம் காய்ச்சி வியாபாரம் செய்ததால் இவன்மேல் பொலீசார் வழக்குத்தொடர்ந்து, இரண்டாண்டு சிறைத்தண்டனையும் அளித்தனர் கோர்ட்டார். அன்று சிறைக்குப் போனவன்தான் இன்று சாமியார் வேடத்தில் முற்றும் துறந்த முனிவரைப்போல், அமைதியாக, தாடியும் சடாமுடியும், நெற்றியில் திருநீறும், கழுத்தில் உருத்திராட்சமும் இடையில் ஓர் காவி உடையும் அணிந்து இந்தத் தோப்புக்கு வந்துவிட்டான் போலும்! என்ற கேள்விகளை எனக்கு நானே கேட்டுக்கொண்டு விடை புரியாமல் வீடு திரும்பினேன்.

✽

# ஏன் பெற்றாய் அவர்களை நீ!

கோழி கூவாமுன்பு எழுந்திருந்து சென்று கோட்டான் கூவும்வரை காட்டையழித்து, மேட்டைத் திருத்தி கழனியாக்கி, நெல் விளைக்கும் காத்தான் நாட்டுக்கு நல்கும் நன்மைகள்பல. ஆனால், எலும்பொடியப் பாடுபடும் அந்தப் பாட்டாளிக்கு நலன் சிறந்து, நாடும் பலன் கைமேல் கிடைத்தால்தான் நாடு நன்மைபெறும். உழைக்கப் பிறந்த காத்தான் ஓடியோடி உழைத்தும், வாழ்க்கையின் செலவு ஓட்டத்தைப் பிடிக்கும் வருவாய் அவனுக்குக் கிடைக்கவில்லை. காலா காலத்தில் மழைபொழிய, கரம்பை எல்லாம் உழுது பயிர் செய்து, ஒன்றுக்கு இரண்டாக விலைகொடுத்து உரவகைகள் வாங்கி இட்டுக், கண்ணைப்போல் காத்தாலும் காலம் அவனுக்குச் சோதனையைத்தான் தந்த வண்ணமிருந்தது. தன் குடும்பத்திற்கு வாங்கும் மற்றைப் பொருள்களின் விலையோ ஏறிக்கொண்டிருக்கிறது; தன் தொழிலின் வருவாயோ, தொழிலுக்கு ஈடுவைத்த செலவு போக, உழைப்பிற்கு எஞ்சியது கொஞ்சம்தான். அதை வைத்துக்கொண்டு குடும்ப மதிப்பை எப்படிக் காப்பாற்றமுடியும்? ஆகவே, கடன் வாங்கித் தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். அப்படியும் வாழ்க்கையா நடத்தினான் காத்தான் இல்லவே, இல்லை! தன் உயிரையும், தன்னை நம்பியிருக்கும் உயிர்களையும் காப்பாற்றிவந்தான். அவ்வளவுதான்!

காலம் உருண்டோடிக்கொண்டேயிருந்தது. வானமும் தான் பொய்க்கத் தவறியது. வானம் சுருங்கின் வயற்காட்டின் வனப்பையும் வருவாயையும் காண்பதேது? மகசூல் மாறாது வந்த காலத்திலேயே, உயிர்களைக் காத்துவந்த காத்தான், இப்போது என்ன செய்வான்? சிந்தனை மரக்கலத்தை, வேதனைப் பாய் மரத்தோடு உள்ளத்துக் கடலிலே மிதக்கவிடுவதைத் தவிர, வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை.

"வானம் கருணைவைத்து வான் மழையைப் பொழிந்துவிட்டால், வகையாகப் பாடுபட்டுப், பயிரிட்டு, வந்துசேரும் விளைவை ஏற்றவிலைக்கு விற்றுக் கடனைஎல்லாம் தொலைத்துவிட்டு நிம்மதியாக வாழலாம்."

என எத்தனையெத்தனையோ எண்ணக் கோட்டைகளைக் கட்டினான் காத்தான்.

சொத்துக்களையெல்லாம் ஈடுவைத்துவாங்கிய கடன்தொகையோ 'கூட்டுவட்டி' என்ற குட்டிபோட்டுக் கொடுமை உருப்பெற்று நின்றது.

சி. பெரியண்ணன்

எழுத்தறிவு அற்ற காத்தானை, வாயடி கையடி வேறு அடித்துப், பொய்க்கணக்குகள் பல எழுதி, அவன் சொத்தையெல்லாம் பறித்துக் கொள்ளும் வஞ்சகனாய் மாறிவிட்டான் கடன் தந்த பணக்காரன். என்ன செய்வான் ஏழை! ஏற்றம் கொண்ட—கண்ணியமற்ற கனவானின் காலைப்பிடித்து அழுவதைத் தவிர வேறு வழியில்லை, அழுதான்! "அன்பரே!" என்றான். "ஆண்டையே பொறுங்கள்!" என்றான். ஏழையின் குரலைச் செவிகொடுத்துக் கேட்பானா இரக்கமற்றபணக்காரன்? வழக்குமன்றத்திலே வழக்குத் தொடுத்தான்.

ஏழை சொல் எங்கே அம்பலம் ஏறப்போகிறது? பணக்காரன் செய்த ஏமாற்றுவித்தைகளையும், பொய்க் கணக்குகளையும் உலகுக்குப் புரியவைக்கும் வலிவு ஏழைக்கு ஏது? அதோடு மன்றத்திலே நீதி வாழ்ந்திருந்தால்தானே வறியனுக்கு அங்கே நீதி கிடைக்கும்?

'இல்லாமை'யென்னும் வெங்கதிர் வாட்டும்போதுகூட, 'மான'மென்னும் குடைபிடிக்க மறக்காத காத்தான், "வாங்கிய கடனைத் திருப்பித் தராத அயோக்கியன்" என்ற இழி சொல்லைப் பொறுப்பானா? நல்லோர் உழைப்பினை உண்டு வளரும் செல்வம், கேடு நினைக்கின்ற கெடுமதியாளரின் கையிலே சிக்கி நிலையான இடம் பெற்ற இன்றைய கேடுகெட்ட சமுதாயத்தில் மாடாய் உழைத்தாலும், மானத்தைப் பூண்டாலும் ஏழைக்கு வாழ்வேது? வளமேது? வாடி வதங்கும் உழைப்பாளிக்கு வாழ்வு தரும் வழியேதுமில்லை. வழியாகக் கூறுவதெல்லாம் ஏழ்மையை மிதித்து வஞ்சம் நடம் புரியும் கொடுவழியாய் ஆக்கப்பட்டுவிட்டது! இப்படிப்பட்ட நிலையில் மானமுள்ளவன் மடிவதைத் தவிர வேறு வழி ஏது?

அக் கட்டத்தை அடையத்தான் காத்தானும் சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆனாலும் அவன் எண்ணினான்,

"அன்புமிகு மனைவியையும், அருமை மக்களையும் அனாதைகளாக்கிவிட்டு நான் மட்டும் மடிந்துவிட்டால், நாநிலத்து நலிந்தோரினம் என்னசொல்லும்? வலியாரைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இளைத்தவன் எது செய்தாலும் எள்ளத்தை வீசுவதுதானே அவர்கள் வழக்கம்? சொத்தனைத்தும் இழந்தாலும், என்னை நம்பி இருக்கும் உயிர்களுக்காக நான் வாழ்ந்துதான் தீரவேண்

டும்! ஆனால், வாழ்வுக்கு வழி எங்கே நான் தேடுவேன்?

வஞ்சகம் என் சொத்தையெல்லாம் சூறையாட எத்தனித்துவிட்டது! அதற்கு வெற்றிகிடைத்துவிட்டால், எனக்கு மிஞ்சுவதெல்லாம் என் மனைவி மக்களும், வறுமையுந்தானே! என்ன செய்வேன்! நாளெல்லாம் ஓடியோடி எலும்பொடிய உழைத்தாலும், ஒரு ரூபாய் கிடைப்பதரிது. அத்தொழிலும் இச்சிற்றூரில் கிடைப்பதோ அரிது. மிட்டாவையும் மிராசையும் நிகர்க்கும் பணக்காரனிடம் சென்று பல்லிளித்துக் கெஞ்சினாலும், 'இல்லை, போடா!' என்ற பதிலைத்தானே எதிர்ப்பார்க்கமுடியும்! என் செல்வங்களை நான் எப்படிக்காப்பாற்றப் போகிறேன்?'' என்று வேதனை எண்ணத்திரையிலே அவன் உள்ளம் அலைமோதிக்கொண்டிருந்தது.

அச்சமயம் சொத்தையெல்லாம் பறிமுதல்செய்ய 'அமீனா' வந்துற்ற சேதிகேட்டுத், துடிதுடித்து, அழுதான்! புரண்டான்! 'ஐயோ!' என்று தலையிலே அடித்துக்கொண்டான். அருமைக் காதலியாள் 'அத்தான்' என்றலறி ஓடிவந்து;

“கொத்தாக நம் வாழ்வு குலைவுபட்டாலும், எங்களின் சொத்தாக நீங்கள் இருக்கும்போது, எங்களுக்கென்ன குறை அத்தான்? கொத்தித் திரிகின்ற கொடுங்காக்கை எருதுப்புண் நோயை ஏறெடுத்து பார்க்காதத்தான்! 'துன்பம் வந்தால் துணையின்றி வருவதில்லை!'' என்று நீங்கள்தானே சொல்லுவீர்கள்! நீங்களே இப்படிக் கண்கலங்கிக் கதறினால் எங்களுக்கு ஆறுதல் அளிக்க யார்வரப்போகிறார்கள்? அழுதழுது கண்ணீர் சிந்தத்தான் “ஆண்டவன்'' நம்மைப் பிறப்பித்திருக்கிறான் போலும்! விதியென்னும் சதியால் ஏழைகளை மயக்கிச், சூதுமதியாலும், சுரண்டல் தொழிலாலும் ஏற்றங்கண்டு, ஏகபோக வாழ்வில் திளைக்கும் வஞ்சகர் விளையாடும், விளையாட்டு மேடைதான் அத்தான் நாம் வாழும் பூமி! நாம் வடிக்கும் கண்ணீரைக்கண்டு யார் நெஞ்சந்தான் நெகிழப்போகிறது? அழத்தான் வைப்பார்களே தவிர, வாழவிடமாட்டார்கள்! இன்றுள்ள வையகத்து மக்களின் நெஞ்சப்பாங்கு இதுதானே? உங்களின் அழுகுரல் கேட்டு, 'அப்பா' என்றலறித்துடித் தோடிவரும் அத்தாணி மண்டபத்து அழகு சிலைகளை வெல்லும் நம் அருமைச் செல்வங்களைப் பாருங்கள்! பாருங்கள் அத்தான்! பாருங்கள்!'' என்றுரைத்து அழுதுகொண்டே தன் மெல்லிய கைவிரலால் கணவனின் கண்களிலே வடியும் கண்ணீரைத்துடைத்தாள்.

கொல்லவரும் கொள்ளிக்கண் கொடும்புலியைக் கண்டு, கள்ளமிலாப் புள்ளிமான் கலங்கும் நிலைபோல, வஞ்சனை வட்டமிட்டுத் தன் வாழ்வை மிதிக்கவரும்போது, வாய் விட்டுக்கதறுவதைத்தவிர, ஏழைக்கு இந்த வையம் தந்த பரிசு வேறு என்ன இருக்கிறது? கண்துடைக்கும் காரிகையை நிமிர்ந்தொரு கணம் பார்த்துவிட்டு;

“சிற்பி செதுக்காத பொற்சிலைகளாம் நம் அருமைச் செல்வங்கள், சீராக வாழ்வதற்கு நான் சேர்த்து வைத்துள்ள செல்வமென்ன தங்கமே! செல்வமென்ன? பாழும் வறுமையிலே சிக்கிவதைபட வைத்துவிட்ட இந்தப் பாவியின் அழுகுரல் கேட்டு அலறும் நம் செல்வங்களுக்கு நான் எப்படி ஆறுதல் கூறுவேன்? சீவிச் சிங்காரித்துப் பிறைமதி நெற்றியிலே பொட்டிட்டு, 'செம்பொன் நிறத்தழகா! செந்தமிழின் சொல்லழகா! சின்ன நடை நடந்து செல்லடா பள்ளிக்கு என் செல்வமே!' என்று செப்பி அனுப்பிவிட்டுப், பின்னழகைக் காணும் பேற்றைத்தானே பிள்ளையைப் பெற்ற பெற்றோர் பெற்றுவந்துள்ளனர். நாம் பெற்ற பேற்றைப் பார்த்தாயா? எரியும் கும்பிக்கு ஒருகுவளை கஞ்சி யூற்றுவதெப்படி? என்று எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டிருக்கும் நான், மக்களுக்கு ஆற்றவேண்டிய நன்றியைப்பற்றி நினைக்கநேரமேது? ஐயோ! நினைத்தால் நெஞ்சமே வெடித்துவிடும்போல் இருக்கிறது!'' என்று கண்புதைத்துக் கலங்கினான்.

குமுறும் ஆயிரமாயிரம் எரிமலைகளை அடக்க ஆயுதம் தரும் அற்புதப் படைப்புக் கர்த்தாக்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி, கண்ணீரும் கம்பலையுமாய் வேதனைக் கடலிலே சிக்கிச் சித்திரவதை அனுபவித்துக்கொண்டிருக்கும் நிலையினைக்கண்டு, நெஞ்சம் உருகாத வஞ்சகர் வாழும் வையமீதில் வாழ்வெங்கே அவர்களுக்குக் கிடைக்கப் போகிறது?

சிங்காரக் கூட்டினிலே, சிந்தைக் குகந்த பெடையோடு, அன்புமிகு குஞ்சுகளோடு வாழ்ந்துவந்தபறவை, வஞ்சக வல்லூற்றின் பசிக்குத் தன் சிறகுகளைப் பறிகொடுத்துவிட்டு உயிர்தப்பி ஓடிவந்து, பசிமிஞ்சக் கூவும் குஞ்சுகளின் குரல்கேட்டுச், சஞ்சலம் அடையாமல் சாந்தி அடைவதுண்டோ?

வான்மீது கார்கருத்து ஓடிவர, “வந்ததடா இன்பம்!'' என்று கள்ளமில்லாக் காத்தான் துள்ளியோடி வீடடைய, கார்முகிலோ இடி இடித்து மின்னல்மின்னிக் கார் மழையைப்பாரினுக்குப்பரிசாகத்தந்துதவ, களிப்பேறிய உள்ளத்தோடு காத்தான் வயற்காட்டை அடைந்து, காளைகளை ஓட்டிவந்து கழனியிலே நிறுத்தி, நுகத்தடியை வைத்துப் பூட்டி அளவோடு கலப்பையைக் கட்டி ஏர்பிடித்துக் கோல் சுழற்றி எருதுகளை ஓட்டிய காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது அன்று!

ஆனால், இன்று! இன்னல் பல வந்தாலும் கானம்பாடிப் பவனிவரும் வானம்பாடியை, வல்லூறு வானத்தைவிட்டுத் துரத்தினால் என்னசெய்யும்? வஞ்சகற்திற்குப் பலியான காத்தான் ஏதுமற்ற அனாதையாகத் தன்னை நம்பியிருக்கும் வஞ்சியோடும், பிஞ்சு உள்ளம் கொண்ட பிள்ளைகளோடும் வீட்டை விட்டுப்புறப்பட்டான். இல்லை! இல்லை! வெளியேற்றப்பட்டான். சென்றான்! சென்றான்!! சென்றுகொண்டேயிருக்கிறான்! எவ்விடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறான்? எங்கோ தெரியாது? எங்கே செல்வதென்று அவனுக்கும் புரியவில்லை!

அந்தி சாய்ந்தது, அகில மனைத்தையும் இருள் கப்பிக்கொண்டது. “வாழ்க்கைப்பாதை ஒரு காட்டுப் பாதை'' என்று ஒரு அறிஞர் கூறிய தற்கேற்பக், காட்டுப்பாதையிலே கண்ணீரைக் கண் இமைகளிலே தேக்கிக்கொண்டே நடையிட்டுக் கொண்டிருந்தனர். கார்மேகம் கருத்தது; காற்றென்னும் காதல

இந்த வாரம் படித்தீர்களா?

திராவிடத்தின் விடுதலைக்குரல்

“சண்டே டைம்ஸ்”

( ஆங்கில வார இதழ் )

ஆசிரியர்:

ஈ. வெ. கி. சம்பத்

னின் சேர்க்கையால் இடிமுழக்க மிட்டது! 'இச்'சென்ற முத்தம் மின்னலாக மின்னின, அன்புத்துளி கள் உதிர்ந்தன. காத்தான் சென்றுகொண்டிருப்பதோ காட்டுப் பாதை! நேரமோ வெண்மதியற்ற இருள் சூழ்ந்தநேரம்! இருளுக்குத் துணையாகக் கருமேகம் கப்பிக் கொண்டு மழைத் துளிகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கும்நேரம், பிள்ளை களோ 'பசி பசி' என அலறுகின்ற னர்; அதைக் காணச்சகிக்காத அருமைக் காதலியாள்;

"வையகத்து மாதாவுக்கு ஆகாத மக்களாக ஏன் பிறந்தோம் அத் தான்! இனி வாழ, வாழ்க்கைப் பாதையோ புலப்படவில்லை; அதற் கேற்றாப்போல் காட்டுப்பாதையிலே வழியோ தெரியவில்லை! பசியால் வதைபடும் நம் காதல் கனிகளைப் பாருங்கள்! இக் கொடுமையை இனி என்னால் பொறுக்கமுடியாதத்தான்! வாழ்ந்தது போதும், அத்தான்! வாருங்கள்...! வாருங்களத்தான்!"

என்று வாழ்வின் ஓரத்திற்கே அழைத்தாள்!

ஆனால், வாழ்வதற்குச் சிறு நம் பிக்கை அவன் உள்ளத்திலே ஊச லாடிக்கொண்டிருந்தது. அதனால் தன் மனைவிக்கு ஆறுதல் வார்த்தை களைக் கூறிக்கொண்டே விளக் கொளி தென்பட்ட ஒரு குடிசையை நோக்கி நடந்தான்.

அக்குடிசைக்குரியோர், காட்டில் விறகொடித்து, அதை நெடுந்தூரம் தூக்கிச்சென்று நகரத்தில் விலை கூறி, அதில் கிடைக்கும் வருவாயை வைத்துக்கொண்டு வயிற்றைக் கழு வும் வறியோராய் இருந்தனர். கஞ்சி யிலே, வேளைக்கேற்பத் தண்ணீரை ஊற்றி, அவ்விரவு வேளை அருந்த வேண்டிய அளவு கஞ்சியை உண்டு விட்டு, மீதத்தைக் காலை வேளைக்கு வைத்துவிட்டுப் படுக்கையை அடைந்தனர்.

அந்நேரம் காத்தானும், அவன் மனைவி மக்களும், தட்டுதடுமாறிக் குடில்புறம் வந்து சேர்ந்தனர். காத் தான் மெல்லிய குரலில் "ஐயா" என்றான்! "யாரது" என்று கேட்டுக் கொண்டே விறகு வெட்டி வெளியே வந்தான், "பசி" என்று காத்தான் வாய்திறந்து கேட்டுவிட்டான்!

"நாயினுக்கும், கல்லுக்கும் இடும் பொருள்களைப் பசியால் வாடும் அங் கோர் ஏழைக்கு இடமறுக்கும் இரக்கமற்ற பணக்காரப் பக்தர்கள் வாழும் இப்பூமியில், நாளை தன் கும்பிக்கு வைத்திருக்கும் கஞ்சியை விறகு வெட்டியான் எப்படிக் கொடுத்துவிடுவான்" என்றுதான் நாம் நினைக்கக்கூடும்? வறுமையிலே சிக்கி வறியோனாய் இருந்தானே தவிர, ஈரம் இரக்கமற்ற மிருக குணம் படைத்தவனாய் அவன் தன்னை மாற்றிக்கொள்ளவில்லை. அன்பா லும் பண்பாலும் அணைத்து, அமுத மளித்து இருக்க இடம் தந்தான். அதோடு, தான்செய்யும் தொழில்வழி யிலேயே காத்தானையும் அழைத் துச் சென்றான். உழுதுண்டு வாழ்ந்த காத்தான், காட்டில் விறகொடித்து வாழும் நிலையினை அடைந்தான். நாட்கள் பல கடந்தன. அத்தொழி லும் அவனுக்கு நிலைக்கவில்லை. காட்டைக் கண்காணிக்கும் காவலர் கள், "கண்டிப்பாக இனிமேல் காட் டில் விறகொடிக்கக்கூடாது" என்று கட்டளை இட்டுவிட்டனர்! என்ன செய்வான் காத்தான்? "பட்ட காலிலேயே படும்; கெட்ட குடியே கெடும்" என்ற முதுமொழி அவன் மட்டில் உண்மையாயிற்று. கால் வயிற்றுக் கஞ்சிக்கும் இனி அங்கே இடமில்லை; கடைசியில் அடுத்துள்ள நகரத்திற்குச் சென்று எங்கேயாவது ஒரு வேலை தேட முடிவுசெய்தான். இதுநாள் வரை ஆதரவுதந்த நண்ப னுக்கு நன்றி கூறிவிட்டு, நங்கை யோடும், நம்பிகளோடும் நகரை நோக்கி நடந்தான்.

உரமற்றஉள்ளத்திலேஉணர்வற்ற சிந்தனை அலைகள் மோதுதலோடும், மெலிந்தஉடல்தள்ளாடும்நடைபோட வும் முடியாது எப்படியோ நடந்து நகரத்தை அடைந்தார்கள். நாதி யற்ற அனாதைகள்நகர்ப்புறம் சென் றால், 'நடைபாதை'தானே அவர் களின் சிங்கார வாழ்க்கைமாளிகை. அவ்விதி இவர்களுக்கு மட்டும் விலக் களித்துவிடுமா? காத்தான் பல நாட்கள் கால்கடுக்க நடந்து வேலைக் காக அந்நகரத்தைச் சுற்றி அலைந் தான்! ஆனால், அலைந்ததுதான் மிச்சமாயிற்று! ஒரு வேலையும் கிடைத்தபாடில்லை. உழைத் துழைத்து உரம் ஏறிய உடலும், உழைப்பதற்கஞ்சாத நெஞ்சமும் கொண்டிருந்த அந்த நல்லவனுக்கு, ஒரு வேலை கொடுத்து உதவுகின்ற உத்தமர்தான் இல்லாமல் போய்விட் டார்கள்! வேலையைத் தேடும் வேலை யிலே தோல்வியுற்று, நெஞ் சொடிந்து, நிலைமாறி மனைவி மக்கள் தங்கியிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றான்!

பட்டினியால் பரதவிக்கும் அவன் குழவிச் செல்வங்களோ, அவன் இல்லத்து அரசியைப் பிடித்துக் கொண்டு, "அம்மா! பசி, அம்மா! பசி!" என்று அழுதழுது சோர்ந்து விழுந்தனர். பத்து மாதம் சுமந்து படாத பாடுபட்டுப் பெற்ற தாய், வதைபடும் தன் செல்வங்களுக்குத் தண்ணீரை எடுத்து தந்து, "கஞ்சி தான் குடியுங்கள்" என்று கூறி விட்டுக் குமுறி வதைபட்டு, இக் கோரக் கொடுமைகளைக் காணச் சகிக்காமல் தற்கொலைக்குத் துணிந் தாள்! ஆனால், ஒரு நம்பிக்கை மட் டும் அவளைச் சாந்திப்படுத்தியிரா விட்டால், அம்முடிவிலேயே நடை யிட்டு இருப்பாள்.

"ஆமாம்! என் அத்தான் எத்தனை நாட்களாக ஒரு வேலையைத் தேடிக் கொண்டிருக்கிறார்! அனாதைகளுக்கு ஆண்டவனே துணை என்பது உண்மையானால், இன்று கட்டாயம் வேலை கிடைத்தே இருக்கும்! என் அத்தானுக்கு வேலை கிடைத்துவிட் டால் எனக்கென்ன குறை இருக் கிறது? உம்! அவர் திரும்பிவரும் நேரமாகிவிட்டது! இத்தனை நாட்கள் பட்ட துன்பமெல்லாம் இனிவரும் இன்ப வாழ்விற்குக் கடைக்காலாகி விடும்."

என்று எண்ணாத எண்ணமெல் லாம் எண்ணியெண்ணி இன்பத் தையே கண்டவள்போல் பேதை பேதலித்தாள்! அத்தானும் இருக்கை நோக்கி வந்துகொண்டிருந்தான். "வாழ்விற்கு இன்ப வித்தூன்றும் சத்தான மொழியைத்தான் இனி உதிர்ப்பார் என் அத்தான்" என் றெண்ணி எதிர்சென்று "வாருங்கள் அத்தான்" என்றாள்! "வேலை...!" என்ற பேச்செடுத்த அவள், வாட்டக் கீரல் படிந்த அவன் முகத்தை அண் ணாந்து பார்த்துவிட்டு, "அத்தா(ன்)" என்ற சொல்லைக்கூட முடிக்க வில்லை! அவளின் குழிவிழுந்த கண் கள் கண்ணீரை உதிர்த்தன.

( 12-ம் பக்கம் பார்க்க )

புதிய முகவரி

**புலவர் அறிவுடைநம்பி**

2634, தெற்குவீதி

தஞ்சை.

# கழகத் தோழர்களுக்கு

## கொள்கை பரப்புச் செயலாளர்

### வேண்டுகோள்

○○●○○

திருவொற்றியூரில் நடைபெற்ற கழகக் காவலர் கூட்டத்தில், கழகப் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, கழகச் சொற்பொழிவாளர்களும், கழக எழுத்தாளர்களும், கழக அலுவலாளர்களும் எழுத்திலும், பேச்சிலும், செயலிலும் கண்ணியத்தோடு கூடிய கட்டுப்பாட்டு முறையை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நடைபெற்று முடிந்த முறைகேடானவைகளை யெல்லாம் மன்னித்தும், மறந்தும், இனி நடைபெற வேண்டிய நல்லவைகளையெல்லாம் முறையோடு சிந்தித்தும், செயலாற்றியும் வருமாறு கழகத்தோழர்கள் அனைவரையும் பொதுச்செயலாளர் அவர்கள் கனிவோடு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

பொதுச்செயலாளர் கூறியுள்ளதற்கிணங்க, கழகத் தோழர்களுக்குக் கழக அமைப்பு முறை பற்றியோ அல்லது கொள்கை பற்றியோ அல்லது கழக அலுவலாளர் பற்றியோ அல்லது தனிப்பட்ட உறுப்பினர் பற்றியோ ஏதேனும் ஐயப்பாடோ, அல்லது குற்றங்குறையோ தென்பட்டால், அவற்றை முறைப்படி குறிப்பிட்டவர்களிடம் நேரிடையாகவோ அல்லது அந்தந்த அமைப்புகளின் கூட்டத்தில் முறைப்படி வைத்தோ நல்ல முடிவு காணும் முறையை மேற்கொள்ளுமாறு கழகத் தோழர்கள் அனைவரும் வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கழகக் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் மிகக் கவனிப்போடு கட்டிக்காக்குமாறும், கழக அமைப்புகளின் கூட்டங்களில் மட்டுமே வைத்து, விவாதித்துக், கருத்துகளைப் பரிமாறி, முடிவு காணவேண்டிய பிரச்சினைகளைப் பற்றி அறிககைகள் விடுதல், மறுப்பு அறிக்கைகள் வெளியிடுதல், கட்டுரைகள் எழுதுதல், சொற்பொழிவு ஆற்றுதல போன்றவைகளை அடியோடு தவிர்க்குமாறும் கழகக் காவலர்கள் அனைவரும் அனபுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழகச் சொற்பொழிவாளர்களும், எழுத்தாளர்களும், கழக மாநாடுகளில் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் — பொதுக்குழு; தலைமைச் செயற்குழு செய்யும் முடிவுகள் — பொதுச்செயலாளர் தக்கவை எனக் கருதி அவ்வப்போது அவசர அவசியத்தைப் பொறுத்து வெளியிடும் கருத்துக்கள் ஆகியவற்றையொட்டி முறையே பேசுமாறும், எழுதுமாறும் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

உள்நாட்டிலும், உலக அரங்கிலும் ஏற்படும் ஒரு குறிப்பிட்ட புதிய பிரச்சினை குறித்து விளக்கமோ, தெளிவோ, முடிவோ அறிய வேண்டி நேரிடுமாயின், பொதுச் செயலாளரையோ அல்லது பொதுக்குழுவையோ அணுகி விடைபெற முயலுமாறும், தாமே அவசரப்பட்டு எந்தவொரு முடிவுக்கும் வராதிருக்குமாறும் கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

கூடுமானவரையில்கீழ்க்கண்ட கருத்துக்களைப்பற்றிப் பேச்சிலும், எழுத்திலும்கொள்கை விளக்கம்செய்யுமாறு கழகக் காவலர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*

கழகத்தின் முழு முதற் குறிக்கோளான திராவிடச் சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சி நிறுவப்படவேண்டியதன் இன்றியமையாமை;

திராவிடக் கூட்டாட்சி மலர்வதற்குத் துணைபுரியும் அரசியல்—பொருளியல்—சமூகவியல்—மொழியியல்—கலை இயல்—நிலவியல் — வரலாற்றியல் — அறிவியல்—பண்பியல்—மரபியல் போன்ற பல்வேறு வகையான காரணங்கள்;

அரசியலில் சனநாயக உரிமையைப் பாதுகாத்து அதன் வளர்ச்சிக்குப் பணியாற்றும் நோக்கம்;

பொருளாதாரத் துறையில் சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெறும் வழிவகை காணும் நோக்கம்;

சமுதாயத்தில் பகுத்தறிவு நெறியை மேற்கொண்டு சமத்துவ சகோதரத்துவ

அடிப்படையில் மறுமலர்ச்சி காண சீர் திருத்தப் பணி புரியும் நோக்கம்;

அறிவே 'கடவுள்'; அன்பே 'சமயம்' என்னும் நெறி பற்றிய விளக்கம்;

பாராளுமன்ற சனநாயக முறையில் அரசியல்—பொருளியல் — சமூகவியல் கொள்கைகளை நிறைவேற்றுதல்;

கழகம் வன்முறைச் செயல்களை அறவே அகற்றி இன்முறைச் செயல்களை மேற்கொண்டு, மறவழியை நீக்கி அறவழியில் நின்று பணியாற்றும் தன்மை;

பிறகட்சிகளைக் காட்டிலும் கழகம் குறிக்கோள்—கொள்கை — நோக்கம் ஆகியவற்றில் எப்படி மேம்பட்டு விளங்குகிறது என்னும் தன்மை;

காங்கிரசு ஆட்சியிலுள்ள சர்வாதிகாரத் தன்மை — எதேச்சாதிகாரத் தன்மை — தான்தோன்றித்தனம் — மமதை—ஆணவம்— கொடுங்கோன்மை வரிக்கொடுமை—தென்னாடு புறக்கணிக்கப்பட்டுள்ள தன்மை—வடநாடு வளப் படுத்தப்படும் தன்மை—வறுமையாளர் வாட, வளம்பெற்றோர் மேலும் வசதிபெற வழிவகுத்துத்தரும் தன்மை — விலைவாசிகள் ஏற்றம்—உரிமைகள் பறிக்கப் படும் தன்மை — இந்திமொழி ஆதிக்கத்தைத் திணிக்கும் தன்மை முதலியவை; இவற்றின் காரணமாகக் காங்கிரசானது ஆட்சியிலிருந்து அகற்றப்பட வேண்டியதன் இன்றியமையாமை;

திராவிடத்தின் நான்கு மாநிலங்களிலும் அந்தந்த மாநில மொழியே ஆட்சி மொழி ஆதல் — திராவிடத்தின் கூட்டாட்சி மொழிகளாகத் தமிழ், தெலுங்கு,கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளுமே இருத்தல் — உலக வாணிகத் தொடர்பு, உலக அரசியல் தொடர்பு, உலக அறிவியல் தொடர்பு, ஆகியவற்றிற்கு ஆங்கிலத்தைத் துணையாகக் கொள்ளுதல் ஆகிய கழகத்தின் மொழிக் கொள்கை;

வெளிநாட்டுப் பிரச்சினைகளில் நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்து, நேர்மையானவை—நீதியானவை எங்கு இருந்தாலும் அவற்றிற்கு ஆதரவு காட்டுதல்;

பாராளுமன்றம் — சட்டமன்றம் — நகராட்சி மன்றம் — ஊராட்சி மன்றம் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள கழகத் தோழர்கள் ஆற்றிவரும் சீரிய பணிகள்; அவைகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள்;

பொருளியல் துறையில்'சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதி' ஏற்படச் செய்தல்—அந்த நிலை ஏற்பட முன்னிலையாக 'சக்திக்கு ஏற்ற உழைப்பு, உழைப்புக்கு ஏற்ற ஊதியம்' கிடைக்கச் செய்தல்;

மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகத் தேவைப் படும் உணவு — உடை — உறையுள் போன்றவற்றை ஈட்டித்தரும் தொழில்களையும், மிகப்பெரும் பொறித் தொழில்களையும் அரசியலாரே ஏற்று நடத்துதல்;

தொழிலாளர் நலம் பேணுதல்— தொழிலாளர்க்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளை அவர்கள் பெறும்படி செய்தல் — இலாபத்தில் தொழிலாளர்க்குப் பங்கு கிடைக்கும் முறையை ஆதரித்தல்;

மக்களின் உயிர் வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையாததாகத் தேவைப் படும் உணவுப் பொருள்களை அளிக்கும் விளை நிலங்களை அரசே தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டு உழவர்களையும், தொழிலாளர்களையும் திறமைக் கேற்றபடி வேலைக்கு அமர்த்திக் கொண்டு, வேலைக்கு ஏற்றபடி ஊதியம் அளித்தல் அல்லது போதுமான வாழ்க்கை வசதி ஏற்படுகிற வகையில் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையை ஏற்படுத்தி, நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டுதல்;

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் போதுமான சலுகைகள் அளித்து, வாழ்க்கை வசதிகள் பெற வழிகோலுதல்;

இவைபோன்ற பல்வேறு கொள்கைகளையும், குறிக்கோள்களையும் விளக்கிக் காட்டும் பணியில் செம்மையாகவும், சிறப்பாகவும் ஈடுபடும்படி கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை,
4–3–61.

**இரா. நெடுஞ்செழியன்,**
கொள்கை பரப்புச் செயலாளர்–தி.மு.க.

---

10-ம் பக்கத் தொடர்ச்சி

"இனியும் நாம் இவ்வுலகில் வாழ முடியாதத்தான்! சித்திரவதைஅனுப வித்துச் சிறுகச் சிறுக உயிர்விட்டுக் கொண்டிருக்கும் நம் அருமைச் சித்திரப் பதுமைகளைப் பாருங்கள் அத்தான்! பாருங்கள்! வதைபட்டு வாழத்தான் நம்மை வையகத்தில் பிறப்பித்தான் அவன் என்றால், அவனும் அவன் நீதியும் வாழட்டும்! வையகமே மாதா! வானகமே தாயே! உங்களையே நம்பிவாழ்ந்த எங்களின் கதியைப் பாருங்கள்! இது பஞ்சத்தின் கொடுமை என்பார் சில பேர்! இல்லை! இல்லை! வஞ்சகம் எங்களுக்களித்த பரிசு! அத்தான்! வாழ்ந்தது போதும்! நாம்...! நாம்...!" என்று வாய்பொத்தி அழுதாள்.

"சொல் தங்கமே! சொல்! சோகத் திருநாளே நம் வாழ்வின் தொடர் கதைஎன்றால், வாழ்ந்தென்னபலனை நாம் காணப்போகிறோம்? சிந்திக்க நேரமில்லை கண்ணே! சீக்கிரம் சொல்!" என்று உணர்ச்சிவயப் பட்டுத் தன் மனையாளின் தோள்களைப் பிடித்து உலுக்கினான்.

உலகத்தில் வாழமுடியாத அனாதைகள், முடிவில் கண்ட போகபூமி, 'மரணம்' என்னும் சிங்கார மேடை தானே! அதைவிட்டு அவள் மட்டும் வேறென்ன சொல்லப்போகிறாள்! அவளும் துணிந்து அதைத்தான் சொன்னாள்! இன்னல் புகை கப்பி இருண்டிருந்த அவ்விருவர் முகமும் இன்பமென்னும் ஆதவனைக் கண்டதுபோல் மலர்ந்தன! கிளைகளே ஒடியப்போகிறது! பிஞ்சுகள் மட்டும் பிரியாது எங்கே இருக்கமுடியும்? பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு. உயிர் குடிக்கும் நல்லானைத் தேடி நடையிட்டனர்! ஆமாம்! மரண மேடையை நோக்கிப் பயணம் துவக்கினர்!

பயணம் முடிவடையப்போகிறது! பாழும் கிணறு ஒன்று பக்கத்திலே தென்பட்டது! மானத்தை ஈன்றெடுத்து, மாறுத வளங்கொழிக்கும் தென்னகத்துத் தமிழ் மண்ணை எடுத்து மக்களுக்கும், தங்களுக்கும் திலகமிட்டுக்கொண்டு... ஐயோ!...? அக்கொடுமையைச் சொல்வதற்கு நானும் ஏன் இருக்கின்றேன்?

நந்தமிழே! பைந்தமிழே! தாயே! செந்தமிழே, அன்னையே! உன் சேய்கள் செத்துமடியும் கொடுமையைப் பார்! சிந்தை உருகுதம்மா! சிந்தாத செந்நீரைக் கண்கள் சிந்துதம்மா! இந்நிலைக்கு ஆளாக்க ஏன் பெற்றாய் அவர்களை நீ?

# பரிசு

–[கனகு]–

தெருவெங்கும் மின் விளக்குகள் ஒளிபாய்ச்சிக்கொண்டிருந்தன. தெருக்கோடியிலுள்ள அந்தச் சின்னஞ் சிறிய குடிசில்மீது கூடத் தெரு விளக்கின் ஒளி நன்ருகப் பட்டுப் படர்ந்துகொண்டுதான் இருந்தது. ஆனல், அந்தக் குடிசிலின் உள்ளே தெளிவான ஒளியைக் காணேம். வியத்தகு நெய்வும், வேலைப்பாட்டின் நிறைவும்கொண்ட தூக்கணங்குருவிக்கூட்டினுள்தென்படும் மினுக்குப் பூச்சியினைப்போல்–வியத்தகு தொய்வும், வெளிறிய கோலமும் அல்லாமல், வேருென்றுமில்லாத அந்த வெற்றுக் குடிசிலுக்குள், மனிதன் வாழும் கூட்டினுக்குள் காடை விளக்கொன்று மினுக்கிட்டுக்கொண்டிருந்தது. அந்த விளக்கு உமிழ்ந்த மங்கிப்போன ஒளியைவிட, அது கக்கிய கரும் புகையே மிகுதி.

அந்தக் குடிசிலுக்குள் மூன்று உயிர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அதன் ஒரு மூலையில் வதங்கிய மாவடுக்களைப்போல், களைந்தெறியப்பட்டுக் காய்ந்துபோன பூங்கொடிகளைப்போல், இரண்டு உயிர்கள் ஒட்டி, உலர்ந்து முடங்கிக் கிடக்கின்றன; உறக்கத்தால் சுருண்டு கிடக்கின்றன. அவற்றில் ஒன்று தாய்; மற்ருென்று சேய். அந்தக் காடை விளக்கின் அருகில், அந்த விளக்கு வாரி இறைக்கும் கரும்புகை மூக்கினுள் நுழைவதையோ, உள்ளிழுக்கும் காற்றைக் கெடுப்பதையோ, அந்தக் கெட்டகாற்று உள்ளே சென்று காசநோயைத் தரப்போவதையோ, அல்லது அந்தக் கரும் புகை அவன் கருவிழியின் நுண்ணிய பார்வையைச் சிதைப்பதற்கென்றே குபுகுபுவென்று கிளம்பி, குடிசில் முழுதும் நிரம்பித் தாக்குதல் நடத்திக்கொண்டிருப்பதையோ, சட்டை செய்யாமல் செயலில் முனைந்து ஈடுபட்டிருக்கிருன் கந்தன். அவன் அந்தக் குடிசிலின் தலைவன். அங்கே சுருண்டு கிடக்கும் தாய்க்கும், சேய்க்கும் முறையே அவன் தலைவன், தந்தை.

கந்தனின் எண்ணமெல்லாம் அங்கே தரையில் விரிக்கப்பட்டுக் கிடக்கும் — நுண்ணிய, உயர்ந்த கலைத்திறம் கொண்ட வேலைப்பாடுகளாக உருவாகிக்கொண்டிருக்கும் அந்தத் துப்பட்டாவின்மீது படர்ந்து, படிந்து, ஆழ்ந்துகிடக்கின்றது. அடிக்கொரு தடவை அவன் அந்தக் காடை விளக்கைப் பார்த்துக் கொண்டான். காற்றின் அலைக்கழிப்பால் அந்தச் சிற்ருெளி நிலைகுலைந்தது. அவனுடைய கூரிய பார்வை வட்டத்தில் படவேண்டிய—அந்தத் துப்பட்டாவின்மீது வினைபட்டுக் கொண்டிருக்கும் நுண்ணிய கலைச்செயல் ஒளிக்குறைவால் இடர்ப்பட்டுத் தடைப்படும்போதெல்லாம் வெறுப்போடு, ஆத்திரத்தோடு, மன உளைச்சலோடு அதனை அவன் ஏறிட்டு நோக்கிக்கொண்டான்.

திடீரென்று கந்தன் எழுந்தான்—எதையோ நினைத்துக்கொண்டவனைப்போல். குடிசிலின் மூலையிலிருந்த ஒரு பழைய, உடைந்துபோன பெட்டியைத் திறந்தான். அதற்குள்ளிருந்த நீண்ட உறையொன்றை எடுத்தான். உறைக்குள்ளிருந்த கடிதத்தை, அறிக்கையை விரித்துப் பிடித்தபடி விளக்கொளியருகில் வந்தான். அதைப் படிக்கத் தொடங்கினுன். நான்கு நாட்களுக்கு முன்னர் வந்த அறிக்கை அது. இருநூற்று ஐம்பத்து மூன்றும்தடவையாக அந்த அறிக்கையை இப்போது அவன் படிக்கின்ருன்.

அந்த அறிக்கையைக்கொண்டு வந்து கொடுத்தவர்தான் சாமானியப்பட்டவரா? பேரரசின் கலைத்துறைப் பிரிவின் துணை அமைச்சரல்லவா நேரில் அவனை அழைத்துக் கொடுத்தார்! அதை அனுப்பித் தந்த இடந்தான் சாமானியப்பட்ட இடமா? கீழ்த்திசை நாடுகளின் அருமை வாய்ந்த பெருநிதியாம் பழங் கைவினைப் பொருட்காட்சியின் நெறியாளரின் அலுவலகம் அல்லவா அதனை அனுப்பித் தந்துள்ளது!

அந்த அறிக்கை, கீழ்த்திசைநாடுகளில் வதியும் பலருக்கு அனுப்பப்பட்ட படிகளில்ஒன்றுதான். ஆனல், புகழ்பெற்ற —உயர்நிலையிலிருக்கும் —சிலரைக்கொண்டு அனுப்பப்பட்டதல்லவா அது! அந்தச் சிலரிலே குறிப்பிடத்தக்க ஒருவனுக இந்தக் கந்தனும் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தான். அதை எண்ணும்போது அவன் நெஞ்சுவிம்மி, விரிந்தது பெருமிதத்தால்.

சட்டென்று அறிக்கையை மடித்தான் கந்தன். பெட்டிக்குள் போட்டான் அதை.

'சே, பொழுதை வீணுக்கிவிட்டேனே! இவர்கள் எனக்கு அறிக்கை அனுப்புவார்கள் என்று எதிர்பார்த்தா இந்த வேலையில் நான் ஈடுபட்டேன்! இவர்கள் என்னைப் புகழ்வார்கள், பாராட்டுவார்கள், பரிசில் தருவார்கள் என்ற எண்ணத்தோடா இதில் முனைந்துள்ளேன்! சே, அற்பம் அவை எல்லாம்! அவர்கள் எத்துணை உயர்ந்த நிலையில்தான் இருக்கட்டுமே! அவர்கள் எத்துணைச் சிறப்பு வாய்ந்தவர்களாகத்தான் இருக்கட்டுமே! அவர்களின் உயர்ந்த நிலையும், சிறப்பு வாய்ந்த தன்மையும் என்னுடைய அருங்கலைக்கு ஈடாகுமா? அல்லது என் மனநிறைவைத்தான் அவற்றின் மூலம் பெற்றுவிட முடியுமா? அற்பம். அவை எல்லாம் என் அரிய பெரிய கலைக்கு முன்னே அற்பம்! என் செயற்பாட்டுக்கு முன்னே அனைத்துமே அற்பம். இந்த உலகும் இதில் உள்ள மனிதர்களும், மற்ற மற்றப் பொருள்களும் நான் ஈடுபட்டிருக்கும்—என்னை ஈடுபாடுகொள்ளச் செய்துகொண்டிருக்கும், என்னுடைய இந்தக் கலைக்கு முன்னல், கைத்திறனுக்கு முன்னல் அற்பம்,

அவன் மெல்லப் பேசவில்லை. உரக்கவே நினைத்தான். ஆமாம், என்ன பேசினான்தால் என்ன? யார் அவனை ஏன் என்று கேட்கப் போகின்றார்கள்? ஏற்கெனவே அவன் ஒரு 'பித்துக் கொள்ளி' என்றுதானே இந்த உலகம் நினைத்துக்கொண்டிருக்கிறது.

அவனுடைய கைவினைத் திறனைக் கூட உணர்ந்து பாராட்டுகிறவர்கள் எத்தனை பேர்? எங்கோ மூலை முடுக்குகளில், யாரோ இரண்டொருவர்—உண்மையளவில் உணர்ந்து பாராட்டுகின்றவர்கள். அவர்களும் ஒரு வகையில் இல்லாவிட்டால், பிறிதொரு வகையில் பித்துக் கொள்ளிகள் என்ற பட்டத்தைச் சுமப்பவர்கள்தாம்.

கந்தன் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டான். இரண்டு, மூன்று நாட்களாக அவை ஏதோ தொல்லை கொடுக்கின்றன. அதை அவன் சட்டை செய்யவில்லை. செயலில் முனைந்தான்—எண்ணம் செயலாக, செயல் கலையாகியது. சற்று நேரத்துக்குள் அவனே கலையாக மாறி விட்டான்.

பொழுது விடிந்துகொண்டு வந்தது. இன்னும் நிலம் தெளியவில்லை. கந்தன் எதிரில் கிடந்த துப்பட்டா முழுக்க முழுக்க கலை வடிவு பெற்று விட்டது. அந்தக் காடை விளக்கின் மங்கல் ஒளியும் மங்கி மறைந்து கொண்டு வந்தது. அதில் ஊற்றப் பட்டிருந்த எண்ணெய் அவ்வளவு நேரம் எஞ்சியிருந்ததே அதிசயந் தான்.

வெளியே வெயில் ஒளி பரவிக் கொண்டு வந்தது. கந்தனின் கண்கள் ஒளி மாறிக்கொண்டு வந்தன. அவை நோய்தரத் தொடங்கின. களைப்பு, பசி, அயர்வு இவற்றோடு கூட, அந்தக் கண் நோயும் சேர்ந்து கொண்டது. எதைப்பற்றியும் கந்தனால் எண்ண முடியவில்லை. தன் கலைப் படைப்புக்கு அருகிலே அவன் சுருண்டு படுத்துவிட்டான். உறக்கமா, அயர்ச்சியால் ஏற்பட்ட களைப்பா? — அவன் அப்படியே விறைத்துப்போய்க் கிடந்தான்.

அந்தக் குடிசிலின் மூலையில் முடங்கிக் கிடந்த மற்ற இரண்டு உயிர்களும் திடீர் என்று எழுந்து கொண்டன. உலகம் துயின்று கொண்டிருக்கும்போதெல்லாம் விழித்துக்கொண்டிருந்துவிட்டு, அது விழித்துக்கொண்டதும், உறங்கிப் போய்விட்ட கந்தனின் தூக்கத்தைக் கலைக்கக்கூடாது என்று அந்த இரண்டு உயிர்களும் எண்ணினவோ என்னவோ! அவை ஓசை படாமல் வெளியில் வந்தன.

நினைவிழந்து வீழ்ந்தவன் தன்னைத் தானே தெளிவித்துக்கொள்வது போல் நெடுநேரத்திற்குப் பிறகு கந்தன் உணர்வு பெற்றான். எழுந்தான். சுற்றுமுற்றும் பார்க்க விழைந்தான். பார்க்க முடியவில்லை. கண்கள் கொவ்வைக் கனிகள் எனச் சிவப்பேறிவிட்டன—அளவு மீறிய உழைப்பால். திறக்க முடியவில்லை அவற்றை. கொளுத்திக் கொண்டிருந்தது வெயில். மூடிக் கிடந்த இமைகளை ஊடுருவிக் கொண்டு உள் நுழைந்து, விழியைத் தாக்கிற்று அந்த வெயில். விழிகள் கூசமட்டுமா செய்தன? குத்தல் எடுத்தன; அளவு மீறி நோகத் தொடங்கின. அலறி அழவேண்டும் போல் தோன்றிற்று அவனுக்கு.

அவனைச் சார்ந்துகிடக்கும் அந்த மற்ற இரண்டு உயிர்களும் அவன் அருகில் வந்தன. ஏக்கத்தோடு அவனை நோக்கின. செய்வதின்னதென்று தெரியாமல் திகைத்தன.

"அப்பா, என்னைப் பாருங்கள்"—என்றது அந்தச் சேய்.

"இதோ நீங்கள் ஆக்கிய இந்தக் கலைப் படைப்பைப் பாருங்கள்" என்றாள் அந்தச் சேயின் தாய்.

"எதையும் என்னால் பார்க்கமுடியாது இப்போது!" என்று அவன் கூற நினைத்தான். அந்த நினைப்பு அவனைக் கொன்றுவிடும்போல் தோன்றியது.

ஒன்று உயிர்ப்படைப்பு. மற்றொன்று உயிரும் கலையும் கலந்து வார்த்த எழிற்படைப்பு. அவை இரண்டுக்கும் தோற்றுவாய், ஊற்றுக்கால், முன்னிலை அவனேதான். அவை இரண்டும் அவனுக்கு ஒன்றேயாம். எதைப் பார்ப்பேன் என்பான்? எதனைப் பார்க்கமுடியாது என்பான்?

சற்றுநேர மௌனத்திற்குப்பின், "மருத்துவமனைக்குப் போகலாமா?" என்று மெல்ல வினவினான் அவன்.

"வெயில் கொளுத்துகின்றதே! மருத்துவமனை வெகு தொலைவாயிற்றே! எப்படி நடந்துவர முடியும் உங்களால், இந்தக் கண் வேதனையோடு? — இந்த வேளை வண்டியொன்று கிடைத்தால்..."

"வண்டி ஒன்று என்ன! ஆயிரம் கிடைக்கும். எத்தனையோ வெற்று வண்டிகள் தெருவில் போவதைப் பார்க்கவில்லையா நீ! ஆனால், பணம் வேண்டுமே, வண்டிக் கூலிக்கு!"

அவன் தனக்குள் முனகிக்கொண்டான்.

"ஆமாம், நான் படைத்த கலைப் படைப்புக்குப் பரிசு தருவார்கள் அல்லவா? அந்தப் பரிசு எப்போது கிடைக்கும்? அது இப்போதே கிடைத்தால் எவ்வளவு நன்மையாக இருக்கும்?"

ஆமாம், அவன் எண்ணினான் அப்படி. தன்னுடைய கலைத்தொழிலுக்கு எதிரே, தன் கலைச் செல்வத்திற்கு எதிரே இந்த உலகத்தையே அற்பமாக எண்ணியவன்தான், தான் இயற்றித் தந்த அந்தக் கலைப் பொருளுக்குப் பரிசிலை எதிர்பார்த்தான் இவ்வேளை–இந்த இக்கட்டான வேளை. அவ்வளவு எளிதில், அதுவும் இந்த நிலையில் உள்ள ஒருவனுக்குப் பரிசில் கிடைத்துவிடுமா என்ன? வேண்டுமானால் பாராட்டுக் கிடைக்கும்.

வேறு வழியில்லை. அந்த வெயிலைக் கண்டு அஞ்சிக் கொண்டிருக்க முடியாது. அவன் கிளம்ப முனைந்தான். தன் துணைவியின் தோளைப் பற்றிக்கொண்டு, கண்ணிழந்தவன் போல் கண்களை மூடிக்கொண்டு, தன் சேயையும் அழைத்துக் கொண்டு கிளம்ப முனைந்தான் அவன். வெளியில் வந்தான்.

அவ்வேளை பளபளக்கும் ஊர்தியொன்று அந்தக் குடிசிலின் எதிரில் வந்து நின்றது.

"அப்பா, கார் வந்திருக்குதுப்பா, காரு!" கந்தனின் சேய் கை கொட்டிக்கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

அந்த ஊர்தியிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் இறங்கினார். கந்தன் படைத்துள்ள கலைப் படைப்பை வாங்கிக்கொண்டு போக, பேரரசின் உத்தரவுப்படி வந்திருந்தார் அவர். கந்தன் தட்டுத்தடுமாறியபடி, அவன் கைத்திறன் நிறைந்த கலைச்செல்வமாம் அந்தத் துப்பட்டாவை எடுத்தான். ஆட்சித் தலைவரிடம் நீட்டினான்.

துப்பட்டாவை வாங்கிக்கொண்டார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

வாங்கும்போது கந்தன் முகத்தை உற்று நோக்கினார் அவர்.

"ஏன், கண் நோய் வந்துவிட்டதா?"

"ஆமாம்......" மேலே ஏதோ சொல்ல விழைந்தான் கந்தன். வார்த்தை தொண்டைவரை வந்து திரும்பிவிட்டது. குழம்பித் தவித்து நின்றுவிட்டான் அவன்.

"ஐயோ பாவம்! என்றேர் இரங்கல் உரையைப் பகர்ந்துவிட்டுக் கிளம்பிப் போனூர் வந்தவர். கந்தனின் கலைப் படைப்பைப் பிரித்துப் பார்க்கக்கூட நேரமில்லை அவருக்கு.

ஐயோ பாவம்! அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்தான் என்ன செய்வார்—அரசு இட்ட கட்டளையைத் தவிர?

ஆண்டு ஒன்று ஓடிவிட்டது. கந்தனின் குடிசிலைத்தேடி அதே ஆட்சித் தலைவர் வந்தார். அவர் அதிசயப்பட்டுப்போனூர். அங்கேகுடிசை காணப்படவில்லை. கூரையில்லாவீடு தென்பட்டது. 'ஒருவேளை கந்தன் வேறு இடத்தில் பெரியவீடொன்று கட்டிக்கொண்டு குடிபெயர்ந்துவிட்டானே? இருக்கலாம் அப்படியும்!' —எண்ணினூர் ஆட்சித்தலைவர். அக்கம்பக்கத்தில் ஆள்விட்டு விசாரித்தார். சரியான தகவல் கிட்டவில்லை. அவர் தம் கையில் பிடித்திருந்த பாராட்டு இதழை ஒருமுறை பார்த்துக்கொண்டார். முன்னே வேண்டுகோள் விடுத்த, கீழ்த்திசை நாடுகளின் கலைப்பொருட்காட்சியின் நெறியாளர் அல்லவா அதனையும் அனுப்பி இருந்தார்! கந்தனின் கலைத்திறமையை நேரிலும்சொல்லி, அந்தப் பாராட்டிதழை வழங்க வேண்டுவது வந்தவர் கடமை. கந்தனைத்தான் குடிசிலோடு, மனைவி, மகவோடு காணவில்லையே! யாரிடம் அளிப்பது பாராட்டிதழை? அவரைப் பொறுத்தவரையில் ஆள் ஊரில் இல்லை; இருக்குமிடம் தெரியவில்லை.

அதோ, அந்த மரத்தடியைப் பாருங்கள் — தெருமுனைக்கு அருகில். அங்கே ஒரு சேயும், தாயும் போவோர் வருவோரிடம் கையேந்தி ஏதோ—ஏதோ என்ன? பிச்சை—கேட்கின்றூர்கள். அவர்களுக்குப் பின்னுல் ஒருவன் நிற்கிறுன்; ஒரு கையில் கோலொன்றைப் பிடித்து ஊன்றியபடி; மற்றொரு கையைத் தன் மனையாளாம் அந்த மாதின் தோள்மீதுவைத்தபடி. அவன் ஓர் குருடன். அவன்தான் கந்தன். ஆனுல், இந்த ஊர் அவன் பிறந்து வாழ்ந்த — அவனது கலைப்படைப்புக்கு உறைவிடமான ஊரல்ல — அது வேறு ஊர்.

★

# மறக்க முடியாதே!

—[தமிழ்க்கனல்]—

எனக்கு மான்குட்டிமீது மிக்க ஆசை! மீன்குட்டி வளர்க்கவும் ஆசைதான்! வேடுவரிடம் மான் குட்டி கேட்டுப்பார்த்தேன். "கிடைக்காது" என்றனர். மீனவரிடம் மீன் குட்டிகள் கேட்டேன் வளர்க்க! "ஆகட்டும், பார்க்கலாம்" என்றனர் சில பெரியமனிதர்கள்போல!

அதனுல் என்ன? எதிர்வீட்டுச் சிறுமி இருக்கிறுள், என்னிடம் வருகிறுள், போகிறுள்! போதாதா அது? எனக்கு இனி, வேறு மான்குட்டியும் மீன்குட்டியும்தான் எதற்கு?

அவள் பெயர் "பானு" என்பது, நான் "மானு" அல்லது "மீனு" என்றுதான் கூப்பிடுவேன். அவள் மான்போலவும், மீன்போலவும், தானே துள்ளுகிறுள், குதிக்கிறுள்!

ஒரு நாள், "அண்ணு" என்று கூவிக்கொண்டேவந்தாள். 'என்னு' என்று இழுத்தேன். குழந்தைகள் எதுகை நயத்தை மிகவும் சுவைப்பர் என்பதால் நான் அப்படிச் செய்வேன். அவளும் சுவைத்தாள்.

"இதுதானண்ணு எங்களுக்குத் தமிழ்ப் புஸ்தகம்" என்றுள். "புஸ்தகம் என்று சொல்லாதே பானு, புத்தகம் என்று சொல்லு" என்றேன். "எங்க டீச்சர் புஸ்த்தகம்னுதானே சொல்றுங்க! அது தப்பா? உங்களுக்குத்தான் ஒண்ணும் தெரியலே" என்றுள்.

"ஆசிரியர், முதலிலேயே புத்தகம், ஏடு என்று சொல்லிக்கொடுத்திருந்தால் மாணவர்களும் அழகிய தமிழ் பேசுவார்களே! பேச்சிலும் எழுத்திலும் பிறமொழி கலப்பதற்கு இத்தகைய விழிப்பில்லாத ஆசிரியர்கள் அன்றே காரணம்?" என்று நொந்தேன்.

என்னைக் கலைத்தாள் பானு. "அண்ணு, நீங்க எனக்குப் பாடம் சொல்லித்தரணும். இன்னிக்கு முதல்பாடம் சொல்லிக்கொடுங்க" என்று குழைந்தாள். ஆர்வம் மெருகேறிய அந்த அழகு முகத்துக்குப் பொருத்தமான உவமை தேடிக் கொண்டிருந்தபோது மீண்டும் "அண்ணு" என்றுள்.

"சரி பானு, உட்கார்"—என்று சொல்லி, ஏட்டைப்பிரித்து முதற் பாடம் எடுத்தேன். தலைப்பு, அந்த முதல் பாடத்துக்கு, "நம் நாடு" என்றிருந்தது. திடுக்கிட்டேன். புத்தகம் எழுதியவர் யார் எனப் புரட்டிப்பார்த்தேன். ஒரு வித்துவான் எனக் கண்டேன்.

பாடம் படித்துத்தரத் தொடங்கினேன். "நம்நாடு இந்தியா. இதைப் பாரததேசம் என்றும் சொல்லுவார்கள். இந்தியா நம் தாய்நாடு...நாம் பேசுவது தமிழ். தமிழே நம் தாய்மொழி. தமிழ் பேசுவோர் தமிழர்கள். தமிழருடைய சொந்தநாடு தமிழ் நாடு......"

இதுவரை, நான் முதலில் படிக்க, என்னைத் தொடர்ந்து பின்னுல் சொல்லிக்கொண்டு வந்த பானு, திடீரென்று, "அண்ணு, இருங்க, என்றுள்.

"என்னம்மா" என்று கேட்டேன்.

"முதல்பாராவிலே முதல் சொற்றெடர் என்ன" என்று கேட்டாள்.

"ஏன், மறந்துவிட்டாயா? 'நம் நாடு இந்தியா' என்பதுதான் முதல் சொற்றெடர் என்றேன்.

"சரி, இப்போது, கடைசியாகப் படித்த சொற்றெடர் என்ன?" பானு கேட்டாள்.

"தமிழருடைய சொந்த நாடு தமிழ் நாடு'—ன்னு இருக்கிறது" என்றேன்.

"ஏனண்ணு, நம் நாடு என்பது இந்தியா, சொந்த நாடு என்பது தமிழ்நாடு என்று இரண்டு தடவை வந்திருக்கே...அப்போது, நம் நாடு வேற, சொந்த நாடு வேறேயா"— என்றுள். அவள் முகத்தில் அறிவின் தங்கக் கீறல்களைக் கண்டு மெய் மறந்தேன்.

ஆமாம்! அவள் கேட்பதும் நியாயம்போல்தானே தெரிகிறது? மீண்டும் அவ்விரு வரிகளையும் படித்தேன். உண்மையில் அவ்வாசிரியர் குழந்தைகள் மனம் குழம்பும்படி எழுதியிருக்கிறூர். பானுவைப்போல் கேட்பவர்கள் வேண்டுமானுல் பலர் இல்லாமல் இருக்கலாமே தவிர, கருத்தும், பொருளும் தவறுடையவை என்பதில் ஐயப்படுவார் யாரும் இருக்கமுடியாதே! நம் நாடு என்பதும், சொந்த நாடு என்பதும்

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

ஒன்றுகத்தானே இருக்கமுடியும்? அப்படி இருக்க, இவ்வாசிரியர் ஏன் அப்படி எழுதினர் என்பது எனக்கு 'எட்ட'வில்லை. இத்தகைய புத்தகத்தைக் கல்வித் துறையினர் எப்படித்தான் அங்கீகரித்திருப்பார்கள்? கூடாதே, என்று எண்ணியபடி இருக்கையில், "சென்னை, செயின்ட் ஜார்ஜ் கெஜட், I.B பகுதியில் 6-ம் பக்கத்தில் 28-5-'58ல் வெளியான கெஜட்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததையும் பார்த்துத் திகைப்பால் ஊமையாயிருந்தேன்.

"ஏனண்ணா, நான் கேட்ட கேள்விக்குப் பதில் தெரியலையா? எங்க டீச்சராய் இருந்தால் இந்நேரம் சொல்லி இருப்பாங்க" என்றாள். உண்மையில் எனக்குப் பதில் தெரியவில்லைதான். ஆனால், புத்தகத்தில் அச்சிட்டிருப்பது தவறு என்று எனக்குப் பட்டாலும், அவளிடம் சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டாளே! ஏன் என்றால், புத்தகத்தில் இருப்பதும், ஆசிரியர் சொல்லுவதும் தப்பாகவே இருக்காது என்று எண்ணும் பருவம் அது, என்று உள நூல் கூறுகிறதே.

எனினும், ஒருவாறு தெளிந்து' என் எதிரில் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த இந்தியத் துணைக் கண்டத்தின் படத்தைக் காட்டிச் சென்னை "மாநிலத்தை"க் காட்டி "இதுதான் தமிழ் நாடு, இது முழுதும் இந்தியா" என்று விளக்கினேன்.

"இந்தப் படத்தைக் குடியரசு தினத்தின்போது எங்க டீச்சர் காட்டினாங்க. ஏனண்ணா, நேருதான் நமது நாட்டுக்கு இராசாவா?"

"ஆமாம் பானு...இராசாபோல... பிரதம மந்திரி என்பார்கள்.

"தமிழ் நாட்டுக்குமா அவர் பிரதம மந்திரி?

"இல்லை, தமிழ் நாட்டைக் காமராசர் ஆள்கிறார்,, என்றேன்.

"இரண்டு பேரிலே யார் பெரியவங்க?"

"நேருதான் பெரியவர்...சரி சரி... பாடத்தைப் படிக்கலாம்" என்று திருப்பினேன்.

"அந்தப் 'பாழாய்ப் போன' பாடம், நாட்டின் பழம் பெருமைகளை நீங்கள் காப்பாற்றவேண்டும்" என்று முடிந்திருந்தது.

"பழம் பெருமை என்றால் என்ன அண்ணா?"—பானு கேள்வி தொடுத்தாள்.

"அதாவது, தமிழர்கள் வீரம் நிறைந்தவர்கள். இதோ பார், இது தான் இமயமலை. இதுவரை பட்டாளத்தைக் கூட்டிப்போய் வெற்றி பெற்றிருக்கிறான் தமிழன். கடல் இருக்கல்லவா! அதிலே கப்பல் ஓட்டிப் பலவேறு நாடுகளுடன் வியாபாரம் செய்திருக்கிறான். பெரிய பெரிய புலவர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள்..." என்று நான் மெல்லச் சொல்லிக்கொண்டே வந்தேன்.

"அதுமட்டுமல்லடி பானு, கேள்! குன்றுகளைக் குடைந்து குகைகளாக மாற்றி, அதிலே கோலமிகு சிற்பங்களைக் கொத்திவைத்த கை தமிழரின் கை! கலையும்காவியமும், ஆற்றலும் அறிவும் தமிழரின் சொத்து! எல்லோருமா, எல்லோராபோலச் செய்யமுடியும்? அது தமிழரின் தனிக் கைவரிசை! பொங்கிவரும் கற்பனையின் ஒரே ஒரு துணுக்கு அஜந்தாவின் ஓவியச் சிறப்பு!" என்று சுவைபடச் சொல்லி நிறுத்தினான் பானுவின் அண்ணன் — பதினொரு அகவையினன்-பாண்டியன் என்னும் பெயரினன்!

"போடா பெரிய அறிவாளி இவன்! பொய் சொல்றான் இல்லையா அண்ணா" என்று தன் அண்ணனை இகழ்ந்தாள்.

"அவன் சொல்லுவது எல்லாம் உண்மைதான் பானு" என்றேன். பாண்டியன் தொடங்கினான்.

"நான் சொல்லுவதெல்லாம் உண்மையடி! இன்னும் எத்தனையோ உள்ளதடி! ஆனால், சூறையில் வீழ்ந்த மரம்போல, பாறையில் வீழுந்த கண்ணாடிபோல, நமது பழம் பெருமைகள் அழிந்தும், ஒழிந்தும் போயின. பரம்பு மலையிழந்து, பாரியாம் தந்தை இழந்து, பட்டம் இழந்து கொற்றம் இழந்து நின்ற பாரிமகளிர் போல இன்று நாம் இருக்கிறோம்"— என்றான்.

இப்போதுதான் எனக்கு நினைவுக்கு வந்தது, பாண்டியன், பள்ளி விழா நாடகத்தில் நடிக்கும் செய்தியும், அதில் அவன் பேசவேண்டிய உரையாடலைத்தான் இத்துணை நேரமும் பேசினான் என்பதும்.

பானு விடவில்லை, "ஏனண்ணா, நாமெல்லாம் அந்தக் காலத்திலே, அண்ணன் சொல்கிறபடி இருந்தோம் என்றால், இப்ப ஏன் இப்படி இருக்கிறோம். அதை மாற்ற வழி இல்லையா அண்ணா?" என்று குழைந்து கேட்டாள்.

நான் தடுமாறிக்கொண்டிருந்தேன். "பழையதை மறந்துவிடு பானு. நமக்கெதற்கு அதெல்லாம்? பெரியவர்கள் இருக்கிறார்கள் அவை பற்றிக் கவனிக்க" என்று பேச்சை முடித்துவிட்டேன் — பானுவையும் வீட்டிற்குப் போகச்சொல்லிவிட்டேன்.

அதோ, அந்தப் பூஞ்சிறுமி போய் விட்டாள். சிறிது நேரத்தில் மகிழ்ச்சியுடன் விளையாடுவாள்—என்னிடம் உரையாடியதை மறந்தும் விடுவாள்.

ஆனால், நான்? என் மன உளைச்சல்? 'பழையதை மறந்துவிடு பானு' என்று அவளுக்குச் சொன்னேனே தவிர, என்னால் பழையதை மறக்கவா முடிகிறது?

✻

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.